# ஆண்டு அறிக்கை
# 2015 - 2016

# ஆண்டு அறிக்கை
# 2015 – 2016

## பொருளடக்கம்


| வ.எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | வாரிய இயக்குநர்கள் | 52 |
| 2. | தணிக்கையாளர்களின் அறிக்கை | 53 |
| 3. | இருப்பு நிலைக்குறிப்பு, வரவு–செலவு கணக்கு மற்றும் அட்டவணை | 60,61,62 |
| 4. | குறிப்பிடத்தக்க கணக்குமுறைக் கோட்பாடுகள் | 71 |
| 5. | கணக்குகள் மீதான குறிப்புகள் | 74 |
| 6. | தமிழக அரசின் ஆய்வறிக்கை | 82 |
| 7. | நிதிநிலைச் சுருக்கம் – ஐந்தாண்டு ஒரு கண்ணோட்டம் | 101 |

# தன்னாண்மை தணிக்கையாளர் அறிக்கை

எம்.சி. ரெங்கநாதன் மற்றும் குழுமம்
பட்டயக் கணக்காளர்கள்
பதிவு எண் 003061 S

எண். 147/1, 2வது மாடி
சுகான்ஸ் சிவகாமி ஸ்கோயர்,
ஜி.என். செட்டி ரோடு,
டி. நகர், சென்னை – 600 017.
தொலைபேசி எண் : 044 – 28156987
மின் அஞ்சல் : mcs@camcr.in

## தணிக்கையாளர் அறிக்கை

## சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய இயக்குநர்களுக்கு

### நிதிநிலை மீதான அறிக்கை

1. நாங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் 2016 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாளின் நிலவரப்படி இருப்பு நிலைக் குறிப்பினையும், அந்நாளில் முடிவுற்ற ஆண்டின் வரவு செலவுக் கணக்கையும், அதில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணைகளையும், சுருக்கமான குறிப்பிடத்தக்க கணக்கு முறைக் கோட்பாடுகளையும் மற்றும் கணக்குகள் மீதான குறிப்புகளையும் தணிக்கை செய்து முடித்துள்ளோம்.

### நிதிநிலை அறிக்கைக்கு நிர்வாகத்தின் பொறுப்பு

2. இந்த நிதிநிலை அறிக்கைக்கு தயாரிப்பிற்கு சென்னைக் குடிநீர் வாரிய நிர்வாகமே பொறுப்பாகும், இவ்வறிக்கையில் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய 1978 ஆம் வருட சட்டப்படியும், இந்தியாவால் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்கியல் கோட்பாடுகள், தரநிலைகள் பொருத்தமான கணக்கு வைப்பு தரப்படியும், உண்மையான மற்றும் நியாயமான நோக்குடன் சென்னை குடிநீர் வாரியத்தின் நிதி நிலைமையும், நிதி செயலாக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நிதிநிலை அறிக்கையை உண்மையான மற்றும் நியாயமான நோக்குடன் தயாரித்து முன்னிலைப்படுத்துவதற்கு தொடர்பான வடிவமைத்தல், செயற்படுத்துதல் மற்றும் உள்கட்டுப்பாடு பராமரித்தல் நிர்வாகத்தின் பொறுப்பில் அடங்கும். தவறாகவோ அல்லது மோசடி காரணமாகவோ இந்த நிதிநிலை அறிக்கையில் தவறான தகவல் ஏதும் சேர்க்கப்படவில்லை. நிதிநிலை அறிக்கையில் மோசடி மற்றும் பிழை போன்ற இடர் மதிப்பீடு செய்வதற்கு அறிக்கை தயாரிக்கும் போது சூழ்நிலைக்கேற்ப நடைமுறைகள் பின்பற்றி உரியவாறு வடிவமைக்கப்பட்ட தக்க உட்கட்டமைப்பை நிர்வாகத்தின் அனைத்து நடவடிக்கைகளும் பயனுள்ளதாக இருக்கும் வகையில் நடைமுறைப்படுத்தி உள்ளது.

### தணிக்கையாளர்களின் பொறுப்பு

1. இந்த நிதிநிலை அறிக்கையின் மீது எங்களது தணிக்கையை அடிப்படையாக வைத்து கருத்தைத் தெரிவிப்பது எங்களது பொறுப்பாகும். நாங்கள், இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிலையத்தின் பொதுவான ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள தணிக்கையின் தரத்தில் தணிக்கை

செய்துள்ளோம். இந்த நிதிநிலை அறிக்கையில் தவறான தகவல்கள் எதுவும் சேர்க்கப்படவில்லை என்று நியாயமாக உறுதியளிக்கும் வகையில் நாங்கள் ஒழுக்கவியல் தேவைக்கேற்ப தணிக்கையைத் திட்டமிட்டு, நடத்தி முடிக்க இந்த தணிக்கைத் தரங்கள் வலியுறுத்துகின்றன.

2. நிதிநிலை அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள தொகைகளுக்கும், வெளிப்படுத்தப்பட்ட விவரங்களுக்கும் தகுந்த ஆதாரங்கள் உள்ளது என்பதை சோதனை அடிப்படையில் பரிசீலனை செய்வதும் தணிக்கையில் அடங்கும். தணிக்கையாளர்களின் தீர்ப்பானது, நடைமுறை தெரிவு சார்ந்து, நிதி நிலை அறிக்கையில் எந்த வித முறைகேடுகளோ, இடையூறுகளோ, ஏமாற்றமோ, பிழையோ இன்றி மதிப்பிடப்பட்டுள்ளது என்பதை சார்ந்தது. மேற்படி இடர் அளவிலால், உள்தணிக்கை கட்டுப்பாடு வாரியத்தின் முன்னேற்பாட்டில் நிதிநிலை அறிக்கை, தணிக்கை நடைமுறை சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆனால் வாரியத்தின் உள் கட்டுப்பாடு குறித்த பயன்பாட்டின் கருத்தினை வெளிப்படுத்த நோக்கமில்லை. கணக்கு கோட்பாடுகளையும், நிர்வாகத்தால் செய்யப்பட்ட முக்கிய மதிப்பீடுகளையும் ஆய்வுடன் ஒட்டு மொத்த நிதிநிலை அறிக்கையின் வெளிப்பாட்டை சீர்தூக்கிப் பார்த்தலும் இத்தணிக்கையில் அடங்கும்.

3. கணக்கியல் விதிகள் மற்றும் தணிக்கை தரத்திற்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டும் தணிக்கை அறிக்கைக்கு சேர்ப்பதற்கான விஷயங்களையும் கருத்தில் கொண்டுள்ளோம்.

4. நாங்கள் மேற்கொண்ட தகுதியான தணிக்கை கருத்துகளுக்கு அடிப்படையான, ஏற்ற வகையில் தேவையான அனைத்து தணிக்கை ஆதாரங்களையும் பெற்றுள்ளதாக நம்புகிறோம்.

ஏ. மானியம்

1. அட்டவணை–கியூ–இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு–குறிப்பு எண் II – 4 – அரசிடமிருந்து மானியம் – பிப்ரவரி 2016 மற்றும் மார்ச் 2016ம் மாதங்களில் பெற்ற ரூ. 8.97 கோடிக்கான மானியத்தை கணக்கில் கொண்டு வராமலிருப்பது, இதே போல் ஒரு திட்டப்பணிக்காக வாங்கப்பட்ட மானியம் வேறொரு திட்டப்பணிக்காக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது ஆகியவை கணக்கியல் நியமம் – 4 னை புறம்பான செயலாகும் மற்றும் இருப்பு நிலைகுறிப்பு தேதிக்கு பின்பு நடைபெற்ற இச்சம்பவம் இந்தியக் கணக்காளர் நிலையத்தால் அறிவிக்கப்பட்ட கணக்கியல் நியமம் – 12க்கு புறம்பானது. அதன் விளைவாக அரசு மானியம் பொறுப்புகள் தலைப்பின் கீழ் பொறுப்புரிமை மாற்ற நிதி மற்றும் நடப்பு சொத்துக்கள் அட்டவணை இடப்பட்ட வங்கிருப்பு கணக்கில் குறைவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2. அட்டவணை கியூ – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் II – 2,5&6 – அரசு மானியம், பெருநகர வளர்ச்சி திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்திற்கான கூடுதல் மைய உதவி நெம்மேலி கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் மற்றும் இதர திட்டங்களுக்கு இந்த நடப்பு ஆண்டு பெறப்பட்ட தொகை 374.68 கோடி, பங்குகளுக்குப் பதிலாக அரசு மானியமாக கருதப்படுவது குறித்த இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் பிறப்பித்த கணக்கு வைப்பு முறை (திருத்திய) 12ன் படி, பொறுப்பில் மானியம் அதிகப்படியாகவும் பங்குகள் குறைவாகவும் காட்டப்பட்டுள்ளது.

3. இரண்டாம் சென்னை திட்டத்திற்கும், சென்னை மாநகர நதி பாதுகாப்பு திட்டத்திற்கும் மானியங்கள் பெறப்பட்டுள்ளது. இத்திட்டங்களுக்குண்டானபணிகள் முடிவடைந்தன. பணிக்குண்டான

சொத்துக்களை "நடப்புபணியில் சேர்த்து, பெறப்பட்ட மானியத்தை கடன்பாடாக பாவிக்கப்பட்டுள்ளது. கணக்கியல் கொள்கை மானியங்களை கருதும் முறைபற்றி தெளிவாக இல்லை. கணக்கியல் நியமப்படி அரசாங்க மானியங்கள் தனியாக காண்பிக்கப்படுகிறது, அரசாங்க மானியம் பொருத்தவரை இவை திருப்பி செலுத்தப்படுவதில்லை.

பி) நடப்பு கடன்கள் மற்றும் ஒதுக்கீடுகள்

1. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் V– 2– மற்ற பொறுப்புகள்–மற்றவை தலைப்பில் 16 பேரேட்டு கணக்கில் காட்டப்பட்டுள்ள மொத்த தொகையான ரூ. 169.92 கோடி பற்று இருப்புக் கணக்கில் காட்டப்பட்டுள்ளது.

2. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் V– 2 இ– மற்றைய பொறுப்புகள் – மற்றவை – தலைப்பில் ரூ. 29,172/– க்கான தொழிலாளர் மாநில காப்புறுதிக்காக ஒப்பந்தத் தொழிலாளருக்கு செலுத்த வேண்டிய தொகை, சென்னை மாநகராட்சி துறையிலிருந்து ரூ. 20,09,651/–க்கான மற்றும் பொது பணித் துறையிலிருந்து ரூ. 13,18,201/– சேமிக்கப்பட்ட ஓய்வூதியம் மற்றும் பணிக் கொடைக்கு பரிமாற்றம் செய்யப்பட்டத் தொகை நீண்ட நாட்களாக கணக்குத் தீர்க்காமலிருப்பதன் விளைவாக கடன்பாட்டுக் கணக்கில் அதிகப் படியான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

சி) நிலையான சொத்துக்கள்

1. ஒவ்வொரு தலைப்பில் முன்னேற்றத் திட்டங்களுக்கான கணக்குக் குறியீட்டு எண்ணிலுள்ள இருப்புத் தொகை (ரூ. 3367 கோடிக்கும்) சம்பந்தப்பட்ட திட்டத்துறைக்கான பதிவேடுகளிலுள்ள இருப்பு (ரூ. 3441.74 கோடி) ஒத்திசைவு செய்யாத காரணத்தால் கணக்கில் ஏற்படும் விளைவை தீர்மானிக்க இயலவில்லை. துறையின் படி, நடப்பு ஆண்டில் முன்னேற்றத் திட்டத்திலிருந்து நிலையான சொத்திற்கு மாற்றியவை பொது பேரேட்டுடன் பொருந்தியுள்ளது. அதற்கான ஒத்திசைவும் நடை பெற்றுள்ளது. தொடக்க இருப்பு பொருத்தமில்லாத காரணத்தினால் முடிவு இருப்பு பொருந்தவில்லை.

2. நிலையான சொத்துக்கள் – முன்னேற்றத் திட்டங்களுக்கான இருப்புத் தொகையான ரூ. 0.16 கோடி ஒத்திசைவு செய்யாத காரணத்தால், கணக்கில் ஏற்படும் தாக்கத்தை தீர்மானிக்க இயலவில்லை. பகுதி அலுவலகத்திலிருந்து தலைமை அலுவலகத்திற்கு குறிப்பேடு பதிவு மூலமாக சொத்துகளாக மாற்றம் செய்வதை நிறுவனம் கருத்தில் கொள்ள வேண்டும்.

3. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்புகள் – குறிப்பு எண் VI– 1– நிலையான சொத்துக்கள் –484 முன்னேற்றத் திட்டங்களுக்கான கணக்கில் எவ்வித நடவடிக்கையோ, முன்னேற்றமோ இல்லாமல் 2014–15 மற்றும் 2015–16ஆண்டுகளில் மொத்த ரூபாய் 477.35 கோடி உள்ளது மற்றும் கணக்கு முறைக்கோட்பாடுகளின் தற்காலிக விகிதமுறையில் தேய்மானத்திற்கு என்று எவ்வித ஒதுக்கீடும் செய்யாமலிருப்பதால், கணக்கில் ஏற்படும் தாக்கத்தை தீர்மானிக்க இயலவில்லை.

4. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்புகள் – குறிப்பு எண் VI– 4– நிலையான சொத்துக்கள் – முன்பிருந்த உள்ளாட்சி அமைப்புக்கள் சில நிலையான சொத்துக்கள் மீது

அவர்களுக்கு உரிமை இல்லாத நிலையில் பயன் படுத்தியதால் சென்னைக் குடிநீர் வாரியம் அதற்குண்டான இழப்பீட்டுத் தொகையை உண்மையான உரிமையாளர் செலுத்திய போதிலும் சென்னைக் குடிநீர் வாரியம் பெயரில் இன்றும் அச்சொத்துரிமை மாறாமலிருப்பதால் கணக்கில் ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை. வட்டாட்சியரிடமிருந்து (நிலம் மற்றும் உடைமை) உறுதிப்படுத்த கோரியும், அதற்கான விளக்கங்கள் அளிக்கப்படவில்லை.

5. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் VI– 5– நிலையான சொத்துக்கள் – வறட்சி நிவாரணப் பணிகள் தலைப்பில் உள்ள நிலையான சொத்துக்களின் மதிப்பு ரூ. 110.62 கோடியில் வழக்கொழிந்த சொத்தின் மதிப்பை தள்ளுபடி செய்யாத காரணத்தால் நிலையான சொத்துக்களின் மதிப்பு அதிகமாகவும் செலவினக் கணக்கில் வருவாயைக்காட்டிலும் குறைவாகவும் 31.3.2016 அன்று உள்ளபடி காட்டப்பட்டுள்ளதால் அதற்கீடான தொகை பற்றாக்குறையில் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

**<u>டி) பொருள் விவரப் பட்டியல்</u>**

1. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் VII – 1அ- 31.3.2016 அன்றுள்ளபடி பழமையான பொருட்கள் விவரப்பட்டியலை பகுத்தாய்வது இன்மையால், வழக்கொழிந்த/பயனற்ற இருப்புக்களை கண்டு பிடிக்கும் செயல்முறை இன்மையாலும், கணக்கில் ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை.

2. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் VII – 1ஆ – பண்டகசாலை தனிக் கணக்கிலுள்ள நிலுவை இருப்புத் தொகை ரூ. 5 இலட்சத்தை தள்ளுபடி செய்யாத காரணத்தால், நடப்புச் சொத்துக்களின் கீழ் பொருட்கள் விவரப்பட்டியலில் அதிகப்படியாகவும், 31.3.2016 அன்று முடிவுற்ற தேதியில் வரவு செலவுக் கணக்கில், வரவை விட செலவு அதிகம் என்பதால் அன்றைய தேதியில் மொத்தப் பற்றாக்குறையாக காட்டப்பட்டுள்ளது.

3. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் VII –1இ – 31.3.2016 தேதியில் பேரேட்டில், பண்டகசாலை குறைவு என்ற கணக்கில் ரூ. 1.94 கோடி (பற்று இருப்பு), பண்டகச்சாலை மிகுதி என்ற கணக்கில் ரூ. 1.88 கோடி (வரவு இருப்பு) நிலுவை இருப்பை ஒத்திசைவு செய்யாத காரணத்தால் ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை.

4. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் VII –1 ஈ – 31.3.2016ம் தேதியில் பொருட்கள் பட்டியலில் கொடுத்துள்ள சான்றிதழின்படி உள்ள பொருட்கள் இருப்புக்கும் அது சம்பந்தப்பட்ட 7 பண்டகசாலைகள், அதாவது இடிசி, பகுதி அலுவலகம் 3, 4, 5, 7, 10 மற்றும் 12 இருப்பு பேரேட்டுக் கணக்கில் உள்ள நிலுவை இருப்புக்கும் இடையில் காணப்படும் மாறுபாட்டை அதற்கென்ற கணக்கில் ஒத்திசைவு செய்யாத காரணத்தால் ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை.

5. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் VII –1உ – 31.3.2016ம் தேதியில் பேரேட்டு கணக்கு எண்கள் 8252, 8253, 8262, 8264 ஆகியவற்றில் பண்டக சாலை மொத்த நிலுவை இருப்புத் தொகையான ரூ. 11.70 இலட்சம் (வரவு இருப்பு) மற்றும் ரூ. 19.43 இலட்சம்

(பற்று இருப்பு) ஆகிய நிலுவை இருப்புகளை திரும்பப் பெறாதது / தள்ளுபடி செய்யாதது என்பதால் அதற்கென்ற கணக்கில் ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை.

6. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் VII – 1 ஏ – 31.3.2016 அன்று தேதிப்படி, 12 பகுதி அலுவலகப் பண்டக சாலை கணக்கில் தேவையான கணக்கு பதிவுகள் செய்யாத காரணத்தால் மொத்தமாக ரூ.17.73 இலட்சத்திற்கு வரவு இருப்பு காட்டுவதன் விளைவாஸ் நடப்பு சொத்துக்கணக்கு குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

**இ) தலைமை அலுவலகம்/பகுதி பரிவர்த்தனை**

1. அட்டவணை க்யூ – இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் VII –3– அ– 31.3.2016ம் தேதிப்படி – தலைமை அலுவலகம் / பகுதி அலுவலக நடவடிக்கை கணக்கில் காணப்படும் நிகர வரவு இருப்புத் தொகையான ரூ. 100.98 கோடியை ஒத்திசைவு செய்யப் படாத காரணத்தால், ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை.

**எப்) வசூல் கட்டுப்பாடு கணக்கு**

1. அட்டவணை–க்யூ– நிதி இருப்பு நிலை தகவல் குறிப்பு – குறிப்பு எண் VII – 3-ஆ – 31.3.2016 அன்றுள்ள தேதிப்படி – வசூல்கட்டுப்பாடு கணக்கின் இருப்பு ரூ. 4.07 கோடி பயனீடு செய்யபடாததால், இந்த கணக்கின் மீதான தாக்கத்தை அறிய இயலவில்லை.

**ஜி) வங்கி கணக்கு**

1. 31.3.2016 அன்றைய தேதிப்படி கணக்கு குறியீட்டு எண்கள் 9124, 9127, 9131, 9132, 9133, 9134, 9135, 9137, 9139, 9140, 9143, 9146, 9147, 9149, 9204, 9241 மற்றும் 9242ல் உள்ள மொத்த வரவுத் தொகையான ரூ.129.38 கோடி ஒத்திசைவு செய்யப்படாத காரணத்தால், ஏற்படும் தாக்கத்தை அறிய முடியவில்லை.

**எச்) காலவரை வைப்புத் தொகை**

1. அட்டவணை–க்யூ– இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் VII – 3-இ – வங்கிகளில் குறைந்த கால வைப்புத்தொகை ரூ. 306.63 கோடிகள் மார்ச் 2016ன் படி ஒத்திசைவு செய்யப்படாததால் கணக்குகளின் மீது அவற்றின் தாக்கத்தை உறுதிப்படுத்த இயலவில்லை.

2. அட்டவணை–க்யூ– இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் VII – 5-அ – 31.3.2016 அன்றுள்ள தேதிப்படி, வங்கிகளில் வைத்துள்ள முதலீடான காலமுறை வைப்புத் தொகை பேரேட்டிலுள்ளபடி நிலுவை இருப்புத் தொகைக்கும் பணப்பிரிவிலுள்ள பதிவேடுகளிலுள்ள நிலுவை இருப்புத் தொகைக்கும் ஒத்திசைவு செய்யப்படாத காரணத்தால் அதன் தாக்கத்தை அறிய முடியவில்லை.

3. தலைமை அலுவலகத்தின் வங்கி வட்டி, 26 கணக்கியல் நியமத்தோடு ஒத்திசைவு செய்யப்படவில்லை.

**ஐ. கடன்களும் மற்றும் முன் பணங்களும்**

1. கணக்கு குறியீட்டு எண்கள் 8600, 8720 மற்றும் 8820 உள்ள தொகையான ரூ.8,64,034/– தொழிலாளர்களுக்கு முன்பணம் இருப்பு தொகையாக காண்பிக்கப்பட்டுள்ளது.

**ஜே. வட்டி அதிகரிப்பு**

1. அட்டவணை–க்யூ– இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்பு – குறிப்பு எண் VII – 5-அ – (ii) 5(அ) iii – ஒத்திசைவு செய்யப்படாத மீதமுள்ள தொகைக்கான வட்டி அதிகரிப்பு கணக்கு குறியீட்டு எண் 8520, 8523, 8524 வரவு இருப்பு ரூ. 38.25 கோடியாக காட்டப் படுவதால், அதன் தாக்கத்தை அறிய முடியவில்லை. நிலுவையில் உள்ள சமன் செய்யப்படாத இருப்பு நிலை பற்றியது. கணக்கில் இதன் தாக்கம் வரையறுக்கவியலாதது.

**கே. பணியாளர்களுக்கான ஓய்வு காலப் பலன்கள்**

1. அட்டவணை–க்யூ–வரவு செலவு கணக்கிற்கான குறிப்பு–குறிப்பு எண் V பணியாளர்கள் ஓய்வு காலப் பலன்களான ஓய்வூதியம், பணிக்கொடை, விடுப்பிற்கான தொகை ஆகியவற்றிற்கான சட்டரீதியான பொறுப்புகள் 31.03.2016 முடிய கணக்கிடப்பட்டு, ஒதுக்கப்படாததால் இதுகுறித்து ஏற்படும் விளைவுகளை உறுதிப்படுத்த இயலவில்லை. கணக்கியல் நியமம் 15ன் படி "பணியாளர்களுக்கான நலன்களுக்கு" இது பொருந்தாது.

2. அட்டவணை–க்யூ–வரவு செலவு கணக்கிற்கான குறிப்பு–குறிப்பு எண் V – முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து பெறப்பட்ட பணியாளர்களின் ஓய்வு காலப் பயன்களான ஓய்வூதியம், பணிக்கொடை, விடுப்பிற்கான தொகை ஆகியவற்றிற்கான சட்டரீதியான பொறுப்புகள் 30.03.2016 முடிய கணக்கிடப்பட்டு ஒதுக்கப்படாததால் இதுகுறித்து ஏற்படும் விளைவுகளை உறுதிப்படுத்த இயலவில்லை. பட்டயக் கணக்குகள் அலுவலகம் பிறப்பித்த கணக்கு வைப்பு முறை வழங்கிய கணக்கியல் நியமம் 15ன் படி "பணியாளர்களுக்கான நலன்களுக்கு" இது பொருந்தாது.

**எம்) இதர செய்தி கூறுகள்**

**1) உள் தணிக்கை :** வாரியத்தின் இயக்கத்திற்கு ஏற்ப உள் தணிக்கை குழு மற்றும் கட்டுப்பாட்டு இணக்கம் இல்லாமை, பொருள் தணிக்கை மற்றும் நிலையான சொத்துக்களின் சரிபார்ப்பு தணிக்கையின் கீழ் இந்தாண்டு மேற்கொள்ளப்படவில்லை.

**2) மோசடி புகார்கள் :** நிதி கட்டுப்பாட்டு அலுவலர் திடீரென பகுதி அலுவலகம் 6 (பணிமனை 68) ஐ ஆய்வு செய்யப்பட்ட போது, நுகர்வோரிடமிருந்து பெறப்பட்ட வரி மற்றும் கட்டணங்கள் ரூ. 3,07,234/– க்கான ரசீது வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அவர்களின் கணக்குகளில் வரவு காட்டப்படவில்லை (15.10.2015 அன்று ரூ. 1,93,477/– மற்றும் 08.03.2015 அன்று ரூ. 1,11,289/– பிடித்தம் செய்யப்பட்டுள்ளது). இதற்கான ஆய்வை மேற்கொண்டபோது ஜான்ஜீ வைஸ்யா வங்கி லிமிடெட் தற்போது கோடக் மகேந்திரா வங்கியின் காசாளர் கையாடல் செய்தது தெரியவந்தது. சொத்து வரி மற்றும் குடிநீர் மற்றும் கழிவுநீர் வரியை வசூலிப்பதற்காக சென்னைக் குடிநீர் வாரியம் ஜான்ஜீ வைஸ்யா வங்கி ஈடுபடுத்தப்பட்டுள்ளது. மோசடிகளைத் தடுக்க உள் கட்டுப்பாட்டு நுட்பத்தை வலுப்படுத்த வேண்டும்.

**<u>3) இருப்பு நிலுவை உறுதியாக்கம் :</u>** மூன்றாம் நபர் நிலுவைகள் உறுதிப் படுத்தப் படாததன் தாக்கத்தால் கணக்குகள் அறியப்பட முடியவில்லை.

**<u>4) பட்டியலிடல் மற்றும் சேகரிப்பில் சரி செய்யப்படாத வேறுபாடுகள் மற்றும் பயன்படுத்தப்படாத பணம் :</u>** பத்து பகுதி அலுவலங்கள் புலம்பெயர்ந்து பதினைந்து பகுதி அலுவலங்களாகியுள்ளன. இவற்றின் கணினி கணக்கியல் முறை யூனிக்ஸ் மென்பொருளிலிருந்து ஆரகல் மென்பொருளுக்கு மாற்றப்பட்டு தணிக்கையின் கீழ் உள்ளது. தற்போதுள்ள வாடிக்கையாளர்கள் பதினைந்து தொகுதிக்குள் பிரிக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக பெறவேண்டிய வரவுகளின் ஒரு பகுதி குறிப்பிட்ட கணக்கிலிருந்து கழிக்கப்பட்டுள்ளது. கணக்கு சீரமைத்தலின் போது 30.06.2014ன் படி நின்ற தொகை ரூ.13.10 கோடிகள் அதை தொடர்ந்து வசூலை சரிக்கட்டிய பின் இருப்பு நிலை அறிக்கையின் படி ரூ. 8.15 கோடிகள். இவை தற்காலிக அமைப்பின் கீழ் செய்யப்பட்டவை. இவற்றிற்கு கணக்கு சீரமைத்தல் செய்யப்பட வேண்டும். இதை சம்பந்தப்பட்ட தொகுதி வாரிய நுகர்வோர் கணக்குடன் தொடர்புபடுத்தி கணக்கிட வேண்டும்.

**<u>5) கட்டுப்பாடு கணக்குகளின் நிலுவை அறிக்கை :</u>** பொதுவாக கட்டுப்பாடு கணக்குகள் நிலுவை சீரமைத்தல் சபசிரிஸ் கட்டுப்பாடு கணக்குகளின் நிலுவை அறிக்கை சீரமைக்கப்பட வேண்டும்.

**<u>6) கருத்து</u>**

எங்களின் கருத்துப்படி, எங்களுக்கு அளிக்கப்பட்ட விவரங்கள், விளக்கங்கள் மற்றும் முக்கிய கணக்கு முறை கோட்பாடுகளின் அடிப்படையில் இந்த இருப்பு நிலைக் குறிப்பும், வரவு செலவு கணக்கும் பொதுவாக நடைமுறையிலுள்ள இந்தியாவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கு கோட்பாடுகளுக்கு உகந்த வகையில் உண்மையான மற்றும் நியாயமான தகவல்களைத் தருவதாகக் கருதுகிறோம்.

i) இருப்பு நிலைக் குறிப்பு 31.03.2016 அன்று வாரியத்தின் செயல்பாட்டு நிலைமைகளுக்கானது, மற்றும்

ii) வாரியத்தின் வரவு செலவு கணக்கிலுள்ள பற்றாக்குறை (வருமானத்தை விட அதிக செலவு) அன்றைய தேதியில் முடிவடைந்த ஆண்டுக்கானதாகும்.

இதே தேதியிட்ட எங்களது அறிக்கையின் படி
எம்.சி. ரெங்கநாதன் மற்றும் குழுமம்
**பட்டயக் கணக்காளர்கள்**
**பதிவு எண். 003061S**

— ஒப்பம் —
**எம்.சி. சாந்தி,**
கூட்டாளி
உ.எண். 018606

இடம் : சென்னை
நாள் : 17.05.2018

## 2016 – ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதிய இருப்பு நிலைக்குறிப்பு

| விவரங்கள் | அட்டவணை எண் | 2015–16 ரூபாய் | 2014–15 ரூபாய் |
|---|---|---|---|
| **பொறுப்புகள்** | | | |
| பங்குகள் | ஏ | 16,27,25,25,805.11 | 15,70,10,06,209.11 |
| அரசு மானியம் | பி | 35,66,50,43,831.53 | 31,45,59,21,572.53 |
| நீண்டகாலக் கடன்கள் | சி | 11,77,32,79,935.00 | 12,19,82,54,103.00 |
| நிறுத்திவைக்கப்பட்ட வரவுகளும் வைப்புத் தொகைகளும் | டி | 10,23,51,91,921.54 | 9,40,13,80,615.54 |
| நடப்புப் பொறுப்புகள் மற்றும் ஒதுக்கீடுகள் | இ | 10,86,17,73,584.59 | 10,24,63,62,415.99 |
| **மொத்தம்** | | **84,80,78,15,077.77** | **79,00,29,24,916.17** |
| **சொத்துக்கள்** | | | |
| நிலையான சொத்துக்கள் | எப் | 62,40,63,35,042.09 | 59,03,26,99,555.22 |
| நடப்புச் சொத்துக்கள், கடன்கள், முன்பணம் மற்றும் வைப்புத் தொகை | ஜி | 10,70,89,20,085.96 | 9,78,21,43,861.71 |
| சேர்ந்துள்ள பற்றாக்குறை | | 11,69,25,59,949.72 | 10,18,80,81,499.24 |
| **மொத்தம்** | | **84,80,78,15,077.77** | **79,00,29,24,916.17** |

இதே தேதியிட்ட எங்களது அறிக்கையின் படி
எம்.சி. ரெங்கநாதன் மற்றும் குழுமம்
**பட்டயக் கணக்காளர்கள்**
**பதிவு எண். 003061S**

வாரியத்திற்காக

— ஒப்பம்—
**கே. முத்துக்குமாரசாமி**
நிதி இயக்குநர்

— ஒப்பம்—
**சத்யபிரதசாஹு, இ.ஆ.ப.,**
நிர்வாக இயக்குநர்

— ஒப்பம்—
**எம்.சி. சாந்தி,**
கூட்டாளி
**உ.எண். 018606**

இடம் : சென்னை
நாள் : 17.05.2016

## 2016 – ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதி முடிந்த ஆண்டின் வரவு–செலவு

| விவரங்கள் | அட்டவணை எண் | 2015–16 ரூபாய் | 2014–15 ரூபாய் |
|---|---|---|---|
| **வரவினங்கள்** | | | |
| குடிநீர் விற்பனை மற்றும் கழிவுநீர் கட்டணங்கள் | எச் | 2,84,99,85,916.04 | 2,85,58,46,897.65 |
| குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி | ஐ | 1,63,56,07,646.40 | 1,54,78,28,544.93 |
| அரசு மானியம் | | 3,87,45,24,763.00 | 2,08,97,04,681.00 |
| இதர வருமானம் | ஜே | 55,29,86,021.37 | 79,79,65,651.92 |
| முந்தையகால சரிக்கட்டல் கணக்கு | என் | 9,94,96,866.54 | - |
| ஐயப்பாடுள்ள கடன்களுக்குக் கூடுதல் ஒதுக்கீடு | | | |
| – குடிநீர்க் கட்டணம் அளவி பொருத்தப்பட்டது | | - | 1,70,15,955.00 |
| வரவை விட செலவு அதிகம் | | 1,50,44,78,450.48 | 2,77,20,53,920.61 |
| **மொத்தம்** | | **10,51,70,79,663.83** | **10,08,04,15,651.11** |
| **செலவினங்கள்** | | | |
| இயக்குதல் மற்றும் பராமரிப்புச் செலவுகள் | கே | 5,11,92,03,046.37 | 4,64,52,38,341.92 |
| பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் ஒதுக்கீடுகள் | எல் | 1,96,72,31,621.03 | 1,92,35,65,913.07 |
| அலுவலகம் மற்றும் நிர்வாகச் செலவுகள் | எம் | 9,54,04,334.95 | 7,02,29,200.41 |
| முந்தையகால சரிக்கட்டல் கணக்கு | என் | - | 33,96,86,698.42 |
| குடிநீர் லாரி வாடகைக் கட்டணங்கள்/ வறட்சி தணிப்புச் செலவுகள்/ வெள்ள நிவாரண செலவுகள் | | 80,55,10,804.39 | 51,62,77,479.61 |
| தேய்மானம் | | 1,66,85,93,676.09 | 1,65,58,57,010.68 |
| கடன் பணிச் செலவுகள் | ஓ | 81,92,04,509.00 | 91,39,20,252.00 |
| ஐயப்பாடுள்ள கடன்களுக்குக் கூடுதல் ஒதுக்கீடு | | | |
| – குடிநீர்க் கட்டணம் அளவி பொருத்தப்பட்டது | | 32,46,974.00 | - |
| – குடிநீர்க் கட்டணம் அளவிபொருத்தப்படாதது | | 65,86,829.00 | 10,48,199.00 |
| – வரிகள் | | 3,20,97,869.00 | 1,45,92,556.00 |
| **மொத்தம்** | | **10,51,70,79,663.83** | **10,08,04,15,651.11** |

இதே தேதியிட்ட எங்களது அறிக்கையின் படி
எம்.சி. ரெங்கநாதன் மற்றும் குழுமம்
**பட்டயக் கணக்காளர்கள்**
**பதிவு எண். 003061S**

வாரியத்திற்காக

--ஒப்பம்--
**கே. முத்துக்குமாரசாமி**
நிதி இயக்குநர்

--ஒப்பம்--
**சத்யபிரதசாஹு, இ.ஆ.ப.,**
நிர்வாக இயக்குநர்

--ஒப்பம்--
**எம்.சி. சாந்தி,**
கூட்டாளி
உ.எண். 018606

இடம் : சென்னை
நாள் : 17.05.2016

## அட்டவணைகள்

### அட்டவணை – ஏ – பங்குகள்

| விவரங்கள் | 2015–16 ரூபாய் | 2014–15 ரூபாய் |
|---|---|---|
| அரசிடமிருந்து பங்குகள் | 4,87,96,58,365.32 | 4,87,96,58,365.32 |
| பொதுமக்களிடமிருந்து பங்குகள் | 6,93,12,77,387.02 | 6,83,19,91,066.02 |
| சென்னை மாநகராட்சியிடமிருந்து மாற்றப்பட்ட பொறுப்புகளை விட அதிக சொத்துக்கள் | 15,91,67,365.25 | 15,91,67,365.25 |
| பொதுப்பணித்துறையிலிருந்து மாற்றப்பட்ட பொறுப்புகளை விட அதிக சொத்துக்கள் | 5,18,87,380.46 | 5,18,87,380.46 |
| தற்காலிக வாரியத்திலிருந்து மாற்றப்பட்ட பொறுப்புகளைவிட அதிக சொத்துக்கள் | 8,42,251.86 | 8,42,251.86 |
| உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து மாற்றப்பட்ட சொத்துக்களை விட அதிக பொறுப்புகள் | -43,69,42,738.80 | -43,69,42,738.80 |
| மூலதன ஒதுக்கீடு | 3,58,10,68,291.00 | 3,10,88,35,016.00 |
| நிலையான சொத்துக்களை புதுப்பித்தல் நிதி | 1,10,55,67,503.00 | 1,10,55,67,503.00 |
| மொத்தம் | 16,27,25,25,805.11 | 15,70,10,06,209.11 |

### அட்டவணை – பி – அரசு மானியம்

| விவரங்கள் | 2015–16 ரூபாய் | 2014–15 ரூபாய் |
|---|---|---|
| இரண்டாவது சென்னைக் குடிநீர்த் திட்டம் | 1,37,37,90,000.53 | 1,37,37,90,000.53 |
| சென்னை மாநகர நதிநீர் பாதுகாப்புத் திட்டம் | 3,51,59,00,000.00 | 3,51,59,00,000.00 |
| ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் | 3,02,51,08,485.00 | 2,69,06,02,485.00 |
| நெம்மேலி கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் | 8,92,63,84,351.00 | 8,92,63,84,351.00 |
| இதர வகைகள் | 7,78,68,77,325.00 | 6,52,38,58,285.00 |
| சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத் திட்டம் | 5,98,58,00,000.00 | 3,83,65,00,000.00 |
| உள்ளாட்சி மானியங்கள் | 1,90,34,07,692.00 | 1,90,34,07,692.00 |
| பொறுப்புரிமை மற்றும் நிதி | 3,14,77,75,978.00 | 2,68,54,78,759.00 |
| மொத்தம் | 35,66,50,43,831.53 | 31,45,59,21,572.53 |

### அட்டவணை – சி – நீண்ட கால கடன்கள்

| விவரங்கள் | 2015–16 ரூபாய் | 2014–15 ரூபாய் |
|---|---|---|
| அரசிடமிருந்து கடன்கள் | 7,27,51,13,540.00 | 7,27,51,13,540.00 |
| நிதிநிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடன் | 4,49,81,66,395.00 | 4,92,31,40,563.00 |
| மொத்தம் | 11,77,32,79,935.00 | 12,19,82,54,103.00 |

## அட்டவணை – ட – நிறுத்தி வைக்கப்பட்ட வரவுகளும் வைப்புத் தொகைகளும்

| விவரங்கள் | 2015–16 ரூபாய் | 2014–15 ரூபாய் |
|---|---|---|
| (I) பொதுமக்களிடமிருந்து வைப்புத் தொகை | | |
| – இணைப்புப் பணிகளுக்கு – கழிவுநீர் | 41,66,664.00 | 10,35,54,345.00 |
| – பொதுப்பணிகளுக்கு | 9,58,76,69,370.21 | 8,77,08,08,166.21 |
| – சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 5,22,02,426.00 | 2,33,99,608.00 |
| (II) பிணை வைப்புத் தொகைகள் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட பணம் | | |
| அ. நிறுத்தி வைக்கப்பட்ட பணம் | | |
| – பொருட்கள் வழங்குபவர்கள் | 2,86,93,354.00 | 2,80,97,701.00 |
| – ஒப்பந்தக்காரர்கள் | 3,33,81,611.00 | 43,53,51,168.93 |
| ஆ. பிணை வைப்புத் தொகைகள் | | |
| – பணியாளர்கள் | 66,597.40 | 66,597.40 |
| – நுகர்வோர்கள் | 1,16,74,109.00 | 1,16,74,109.00 |
| – ஒப்பந்தக்காரர்கள் | 51,73,36,589.93 | 2,84,27,720.00 |
| – இதர வகைகள் | 1,200.00 | 1,200.00 |
| மொத்தம் | 10,23,51,91,921.54 | 9,40,13,80,615.54 |

## அட்டவணை – இ – நடப்பு பொறுப்புகள்

| விவரங்கள் | 2015–16 ரூபாய் | 2014–15 ரூபாய் |
|---|---|---|
| (அ) கடனீந்தோர்: | | |
| – பொருட்கள் வழங்குபவர்கள் | 10,70,43,045.24 | 10,14,25,363.90 |
| – ஒப்பந்தக்காரர்கள் | 96,01,89,022.00 | 83,24,67,828.50 |
| – செலவுகள் | 55,33,35,200.30 | 50,51,24,835.10 |
| முதலீடு சேர்ந்த வட்டி | | |
| – அரசுக் கடன்களுக்கு | 6,81,82,62,710.00 | 6,20,42,16,418.00 |
| – நிதிநிறுவனக் கடன்களுக்கு | 14,69,75,624.00 | 12,05,53,473.00 |
| (ஆ) இதர பொறுப்புகள் | | |
| – பணியாளர்கள் | 1,49,95,10,861.28 | 1,51,78,09,104.88 |
| – மற்றவை | 77,64,57,121.77 | 96,47,65,392.61 |
| மொத்தம் | 10,86,17,73,584.59 | 10,24,63,62,415.99 |

## அட்டவணை எப் – நிலையான சொத்துக்கள்

| விவரங்கள் | ரூபாய் | 2015–16 ரூபாய் | 2014–15 ரூபாய் |
|---|---|---|---|
| **அ. அடக்கவிலையில் குடிநீர் வழங்கல்** | 31,52,16,00,161.95 | | |
| கழிக்க: தேய்மானம் | -12,90,88,04,873.39 | 18,61,27,95,288.56 | 18,44,00,41,452.55 |
| | | | |
| **ஆ. அடக்கவிலையில் கழிவுநீரகற்றல்** | 14,20,59,84,940.20 | | |
| கழிக்க: தேய்மானம் | -6,45,14,94,229.84 | 7,75,44,90,710.36 | 6,48,09,74,893.10 |
| | | | |
| **இ. அடக்கவிலையில் பொதுவானவை** | 80,96,82,950.97 | | |
| கழிக்க: தேய்மானம் | -55,63,37,518.57 | 25,33,45,432.40 | 25,68,01,818.04 |
| | | | |
| **ஈ. முன்னேற்றத்திலுள்ள திட்டங்கள்** | | | |
| **1. குடிநீர் வழங்கல் இதர பணிகள்** | | | |
| – வைப்புத் தொகை பணிகள் | 3,79,54,31,557.57 | | |
| – இதர பணிகள் | 15,95,98,08,819.39 | 19,75,52,40,376.96 | 19,51,93,24,698.69 |
| | | | |
| **2. கழிவுநீரகற்றல்** | | | |
| – வைப்புத் தொகை பணிகள் | 7,28,85,45,295.13 | | |
| – இதர பணிகள் | 7,18,85,30,121.38 | 14,47,70,75,416.51 | 12,86,44,19,907.78 |
| | | | |
| **3. பொதுவானவை** | | 22,36,40,103.14 | 27,53,49,109.29 |
| | | | |
| **உ. வறட்சி / வெள்ள நிவாரணப் பணிகள்** | | 1,10,62,35,599.82 | 1,07,84,89,451.94 |
| **ஊ. வறட்சி நிவாரணப் பணிகள் – பொதுவானவை** | | 22,35,12,114.34 | 11,72,98,223.83 |
| | | | |
| **மொத்தம்** | | 62,40,63,35,042.09 | 59,03,26,99,555.22 |

## அட்டவணை – ஜி – நடப்பிலுள்ள சொத்துக்கள், கடன்கள் முன்பணம் மற்றும் வைப்புத் தொகைகள்

| விவரங்கள் | ரூபாய் | 2015–16 ரூபாய் | 2014–15 ரூபாய் |
|---|---|---|---|
| அ. பொருட்கள் | | 8,31,80,462.84 | 11,18,33,395.58 |
| ஆ. கடனாளிகள் | | | |
| குடிநீர்க் கட்டணங்கள் அளவி பொருத்தப்பட்டது | 24,99,86,751.01 | | |
| கழிக்க: ஐயப்பாடுள்ள பற்று – ஒதுக்கீடு | -6,94,87,333.18 | 18,04,99,417.83 | 16,75,11,519.59 |
| குடிநீர்க் கட்டணங்கள் அளவி பொருத்தப்படாதது | 35,56,29,315.75 | | |
| கழிக்க: ஐயப்பாடுள்ள பற்று – ஒதுக்கீடு | -18,62,57,028.84 | 16,93,72,286.91 | 11,00,90,826.23 |
| வரிகள் | 1,54,66,86,821.08 | | |
| கழிக்க: ஐயப்பாடுள்ள பற்று – ஒதுக்கீடு | -11,37,65,087.93 | 1,43,29,21,733.15 | 1,14,40,40,908.89 |
| 4. பொது ஆணைக்குழுக்களிடமிருந்து வரவேண்டியவை | | 1,99,56,271.27 | 1,99,56,271.27 |
| 5. கட்டண கடனாளிகள் | | | |
| – அரசுக்கு ஊர்தி மூலம் குடிநீர் வழங்கல் | 17,34,26,434.97 | | |
| – கழிவுநீர் சேவை கட்டணங்கள் | 23,97,90,255.48 | | |
| – குடிநீர் இதர வகைகள் | -94,820.50 | | |
| – மேல்வரி | 20,32,76,253.19 | | |
| – அவமதிப்பு காசோலை | 2,78,238.00 | | |
| – சுத்திகரிக்கப்படாத கழிவு | 12,70,751.00 | 61,79,47,112.14 | 56,59,43,857.32 |
| பெறத்தக்க வாடகை | | 1,28,82,739.00 | 57,39,797.00 |
| செ.கு.வா. பணிக்கொடை பொ. குழுமம் | | 1,21,17,987.50 | 1,21,17,987.50 |
| வரி பிடித்தங்கள் | | 3,74,54,470.70 | 3,52,60,331.70 |
| – தலைமை அலுவலக / பகுதி அலுவலக நடவடிக்கை | | 1,00,98,04,477.34 | 33,92,42,786.02 |
| வசூல் கட்டுப்பாடு | | -4,07,36,235.13 | -5,68,14,704.13 |
| இ. கையிருப்பு மற்றும் வங்கி இருப்புகள் | | | |
| அட்டவணையிடப்பட்ட வங்கிகளில் நடப்புக்கணக்கு மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி இருப்பு கணக்கு | | 68,92,86,250.26 | 2,88,40,50,670.24 |
| அட்டவணையிடப்பட்ட வங்கிகளில் குறுகிய கால வைப்புத் தொகை | | 3,06,63,18,075.00 | 1,04,15,39,401.00 |
| கையிருப்புத் தொகை | | 70,943.35 | 27,456.35 |
| பணியாளர் முன்பணம் | | 1,04,892.00 | 98,325.00 |

| விவரங்கள் | குறிப்பு | 2015–16 ரூபாய் | 2014–15 ரூபாய் |
|---|---|---|---|
| ஊ. கடன் மற்றும் முன்பணம் | | | |
| 1. ஒப்பந்தக்காரர்கள் | | 14,78,72,342.00 | 41,61,25,404.00 |
| 2.பொருள் வழங்குபவர்கள் | | 1,46,53,075.40 | 1,00,69,552.40 |
| 3.சேவையினங்களுக்கு | | 1,62,60,398.60 | 1,55,57,576.10 |
| 4.பணியாளர்கள் | | 8,33,48,012.29 | 8,38,52,365.79 |
| 5.இதர வகை | | 4,99,449.79 | 4,99,449.79 |
| உ. வைப்புத்தொகை மற்றும் முதலீடு | | | |
| அ. பணியாளர்கள் | | | |
| 1. சிறப்பு சேமநல முதலீடு | | 6,70,55,538.00 | 6,25,65,226.00 |
| 2. பொது சேமநல முதலீடு | | 75,81,37,207.34 | 70,61,24,558.34 |
| 3. ஓய்வூதிய நிதி முதலீடு | | 1,36,94,51,430.00 | 1,14,73,86,568.00 |
| 4. செபெகுவா பணியாளர் சிறப்பு மருத்துவ நலநிதி | | 1,68,88,420.00 | 1,57,01,565.00 |
| 5. விபத்து உள்ளடக்கிய முதலீடு | | 1,05,38,569.00 | 95,34,399.00 |
| 6. வட்டி அதிகரித்தல் – மற்றவை | | -12,57,93,872.35 | -11,20,57,888.00 |
| 7. வட்டி அதிகரித்தல் – சிபிஎஸ் நிதி முதலீடு | | -25,52,17,782.73 | -14,67,88,270.73 |
| 8. வட்டி அதிகரித்தல் – ஓய்வூதிய முதலீடு | | -15,27,987.00 | -4,26,240.00 |
| ஆ. மற்றவை | | | |
| 1. வைப்புத்தொகை | | 13,56,60,674.46 | 10,50,21,050.46 |
| 2. பொறுப்பாட்சி மற்றும் நிறுத்தி வைத்தல் முதலீடு | | 47,09,29,600.00 | 44,85,93,355.00 |
| 3. நிலையான சொத்து புதுப்பித்தல் நிதி முதலீடு | | 70,89,84,127.00 | 63,97,46,361.00 |
| மொத்தம் | | 10,70,89,20,085.96 | 9,78,21,43,861.71 |

## அட்டவணை – எச் – குடிநீர் விற்பனை மற்றும் கழிவுநீர் கட்டணங்கள்

| விவரங்கள் | 2015–16 ரூபாய் | 2014–15 ரூபாய் |
|---|---|---|
| அ) அளவி பொருத்தப்பட்டவை | | |
| வீட்டு உபயோகம் | 15,59,85,585.00 | 16,04,34,533.75 |
| வணிகம் | 1,19,51,20,615.22 | 1,23,45,09,730.50 |
| நிறுவனங்கள் | 12,13,80,862.00 | 13,34,11,899.50 |
| நகராட்சிகள் | 8,73,65,796.00 | 14,96,16,841.05 |
| ஆ) அளவி பொருத்தப்படாதவை | | |
| வீட்டு உபயோகம் | 35,91,26,154.00 | 33,45,26,644.50 |
| வணிகம் | 19,74,01,212.00 | 18,09,27,910.00 |
| நிறுவனங்கள் | 21,28,080.00 | 22,20,300.00 |
| சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் வழங்கல் | 14,50,88,097.25 | 12,93,89,717.30 |
| லாரிகள் மூலம் குடிநீர் வழங்கல் | 38,47,35,788.00 | 29,77,44,055.10 |
| கழிவுநீர் கட்டணங்கள் | 20,16,53,726.57 | 23,30,65,265.95 |
| மொத்தம் | 2,84,99,85,916.04 | 2,85,58,46,897.65 |

## அட்டவணை – ஐ – குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி

| விவரங்கள் | 2015–16 ரூபாய் | 2014–15 ரூபாய் |
|---|---|---|
| குடிநீர் வரி | 34,96,69,430.98 | 33,37,82,483.00 |
| கழிவுநீரகற்றுவரி | 1,28,59,38,215.42 | 1,21,40,46,061.93 |
| மொத்தம் | 1,63,56,07,646.40 | 1,54,78,28,544.93 |

## அட்டவணை – ஜே – இதர வருமானம்

| விவரங்கள் | 2015–16 ரூபாய் | 2014–15 ரூபாய் |
|---|---|---|
| பயனற்ற பொருட்கள் விற்பனை | 11,79,500.00 | 2,83,86,009.00 |
| வங்கியிலிருந்து வட்டி | 20,96,27,954.00 | 12,15,20,834.00 |
| இதர வட்டி | 7,12,71,168.20 | 14,56,32,403.00 |
| ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பங்கள் விற்பனை | 3,47,600.00 | 3,04,000.00 |
| சரி செய்யப்பட்ட இழப்பீடு | 2,85,10,052.00 | 96,77,305.00 |
| ஈட்டிய ஆலோசனைக் கட்டணம் | 66,39,800.00 | 4,01,82,800.00 |
| இதர பல்வகைப்பட்ட வருமானம் | 23,54,09,947.17 | 45,17,31,974.85 |
| நிலையான சொத்துக்கள் விற்பதன் மூலம் கிடைக்கும் லாபம் | 0.00 | 5,30,326.07 |
| மொத்தம் | 55,29,86,021.37 | 79,79,65,651.92 |

## அட்டவணை – கே – இயக்குதல் மற்றும் பராமரிப்புச் செலவுகள்

| விவரங்கள் | 2015–16 ரூபாய் | 2014–15 ரூபாய் |
|---|---|---|
| அ. இயக்குதல் செலவுகள் | | |
| மின்சக்தி | 1,81,53,40,239.00 | 1,57,17,02,849.20 |
| இராசாயனப் பொருட்கள் | 2,92,40,776.16 | 4,38,95,158.95 |
| எரிபொருள் மற்றும் மசகுகள் | 7,66,62,579.19 | 7,54,26,574.90 |
| கழிக்க: திட்ட ஒதுக்கீடுகள் | -2,29,98,774.00 | -1,58,24,681.00 |
| உதிரிக் கருவிகள் | 18,05,277.35 | 15,36,519.14 |
| சுமைக் கட்டணமும் காப்பீடும் | 0.00 | 61,103.00 |
| கழிவுநீர் ஊர்தி – வாடகைக் கட்டணம் | 1,77,95,224.00 | 3,29,02,773.00 |
| தூர் எடுப்பு | 10,01,18,519.00 | 9,89,24,591.40 |
| இதர இயக்குதல் செலவுகள் | 1,90,93,51,188.54 | 1,68,74,25,827.00 |
| மொத்தம்–அ | 3,92,73,15,029.24 | 3,49,60,50,715.59 |
| ஆ. பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் | | |
| குழாய் வழிகள், நீரேற்றும் நிலையம், தளவாடம் மற்றும் இதர உபகரணங்கள் | 75,56,88,849.53 | 72,28,30,858.65 |
| கட்டடம் மற்றும் கட்டடப் பணிகள் | 18,37,43,452.51 | 17,35,24,505.74 |
| வாகனங்கள் | 25,94,687.00 | 15,39,337.00 |
| இதர பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவுகள் | 24,98,61,028.09 | 25,12,92,924.94 |
| மொத்தம்–ஆ | 1,19,18,88,017.13 | 1,14,91,87,626.33 |
| | | |
| மொத்தம் (அ + ஆ) | 5,11,92,03,046.37 | 4,64,52,38,341.92 |

## அட்டவணை – எல் – பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் ஒதுக்கீடுகள்

| விவரங்கள் | 2015–16 ரூபாய் | 2014–15 ரூபாய் |
|---|---|---|
| ஊதியம், கூலி மற்றும் படிகள் | 2,45,50,13,938.18 | 2,34,99,52,325.13 |
| பணியாளர் நலச் செலவுகள் | 9,91,85,261.85 | 16,35,17,767.94 |
| அயல்துறை பணியிலிருந்து வந்தவருக்குப் பங்களிப்பு | 21,73,668.00 | 6,07,539.00 |
| மொத்தம் | 2,55,63,72,868.03 | 2,51,40,77,632.07 |
| கழிக்க: திட்ட ஒதுக்கீடுகள் | -58,91,41,247.00 | -59,05,11,719.00 |
| | | |
| மொத்தம் | 1,96,72,31,621.03 | 1,92,35,65,913.07 |

## அட்டவணை – எம் – அலுவலகம் மற்றும் நிர்வாகச் செலவுகள்

| விவரங்கள் | 2015–16 ரூபாய் | 2014–15 ரூபாய் |
|---|---|---|
| **அலுவலகச் செலவுகள்:** | | |
| வாடகை மற்றும் வரி | 83,84,173.00 | 76,37,347.00 |
| மின் கட்டணம் | 1,74,87,045.00 | 1,09,94,942.00 |
| கம்பியில்லாத தந்தி, தகவல் தொடர்பு செலவு | 2,04,713.00 | 7,66,119.00 |
| தொலைபேசிக் கட்டணங்கள் | 96,80,182.26 | 93,32,101.81 |
| தபால் மற்றும் தந்திகள் | 77,55,786.00 | 58,52,105.00 |
| அச்சிடுதல் மற்றும் எழுது பொருட்கள் | 1,46,73,852.20 | 1,11,93,889.00 |
| பொருட்காட்சி மற்றும் விளம்பரம் | 32,84,181.00 | 24,47,132.00 |
| இதர அலுவலகச் செலவுகள் | 1,73,11,701.33 | 74,50,555.00 |
| பயணம் மற்றும் பயணப்படிச் செலவுகள் | 3,83,39,780.00 | 3,12,85,280.00 |
| | | |
| **நிர்வாகச் செலவுகள்** | | |
| தணிக்கைக் கட்டணங்கள் | 1,79,315.00 | 2,65,540.00 |
| வழக்குகளுக்குச் செலவுகள் | 12,65,007.00 | 14,00,857.00 |
| ஆலோசனைக் கட்டணங்கள் மற்றும் செலவுகள் | 11,77,896.00 | 7,15,828.00 |
| வங்கிக் கட்டணம் | 16,55,518.63 | 11,63,322.10 |
| மதிப்பூதியம் | 7,640.00 | 2,21,355.00 |
| பிற நிர்வாகச் செலவுகள் | 78,63,207.53 | 62,23,972.50 |
| பொறுப்புறுதி ஆணையக் கணக்கு | 48,65,248.00 | 53,25,316.00 |
| **மொத்தம்** | **13,41,35,245.95** | **10,22,75,661.41** |
| **கழிக்க : திட்ட ஒதுக்கீடு** | -3,87,30,911.00 | -3,20,46,461.00 |
| | | |
| **மொத்தம்** | **9,54,04,334.95** | **7,02,29,200.41** |

## அட்டவணை – என் – முந்தைய கால சரிகட்டிய கணக்கு

| விவரங்கள் | 2015–16 ரூபாய் | 2014–15 ரூபாய் |
|---|---|---|
| அ) பற்று: | | |
| குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வரி | 19,76,44,367.04 | 8,03,39,358.44 |
| குடிநீர்க் கட்டணம் – அளவி பொறுத்தப்படாதது | 5,97,93,856.75 | 3,03,80,465.34 |
| குடிநீர்க் கட்டணம் – அளவி பொறுத்தப்பட்டது | 1,49,74,223.59 | 61,79,950.84 |
| கழிவு நீர்க் கட்டணம் | 2,93,80,481.38 | 1,23,59,901.67 |
| தேய்மானம் | 13,69,97,678.45 | 58,30,22,481.94 |
| சரி செய்யப்பட்ட இருப்பீடுகள் | 20,000.00 | 0.00 |
| மொத்தம் – அ | 43,88,10,607.21 | 71,22,82,158.23 |
| ஆ) வரவு | | |
| குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வரி | 35,29,24,838.20 | 23,17,52,059.27 |
| குடிநீர்க் கட்டணம் – அளவி பொறுத்தப்படாதது | 10,62,38,902.49 | 8,73,62,149.94 |
| குடிநீர்க் கட்டணம் – அளவி பொறுத்தப்பட்டது | 2,68,35,292.63 | 1,78,27,081.74 |
| கழிவு நீர்க் கட்டணம் | 5,23,08,440.43 | 3,56,54,162.46 |
| இதர செலவுகள் | 0.00 | 6.40 |
| மொத்தம் – ஆ | 53,83,07,473.75 | 37,25,95,459.81 |
| மொத்தம் – அ+ஆ | -9,94,96,866.54 | 33,96,86,698.42 |

## அட்டவணை – ஓ – கடன் மீதான வட்டி

| விவரங்கள் | 2015–16 ரூபாய் | 2014–15 ரூபாய் |
|---|---|---|
| அரசுக்கடன் வட்டி | 61,40,46,292.00 | 58,63,47,779.00 |
| நிதி நிறுவனங்கள் வட்டி | 29,27,22,256.00 | 34,77,57,911.00 |
| மொத்தம் | **90,67,68,548.00** | **93,41,05,690.00** |
| கழிக்க: வட்டி முதலாக்கம் | 8,75,64,039.00 | 2,01,85,438.00 |
| மொத்தம் | 81,92,04,509.00 | 91,39,20,252.00 |

## அட்டவணை – பி
## குறிப்பிடத்தக்க கணக்குமுறைக் கோட்பாடுகள்

1. **கணக்குமுறைக் கோட்பாடு:**

நிதிநிலை அறிக்கை வரலாறுமிக்க அடக்கவிலை கருத்து மற்றும் நிறுவன தொடர்ச்சி அனுமானம் ஆகியவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்படுகிறது. ஈட்டிய ஆதாயத்தின் அடிப்படையிலான கணக்குமுறையை சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் பின்பற்றுகிறது.

பொதுமக்களின் பங்களிப்பு குடிநீர் / கழிவுநீர் இணைப்புப் பணிகளுக்காக பொதுமக்களிடமிருந்து கடந்த நிதியாண்டில் பெறப்பட்ட தொகை அடுத்த நிதி ஆண்டில் பொதுமக்களின் பங்குக் கணக்கிற்கு மாற்றப்படுகிறது.

2. **சரக்கு மதிப்பீடு:**

பண்டக சாலையில் உள்ள பொருட்களின் அடக்கவிலை நிறையிட்ட சராசரி முறையில் கணக்கிடப்படுகிறது.

3. **இருப்புநிலைக் குறிப்பிற்குப் பின் நிகழ்ந்த நிகழ்வுகள்:**

இருப்புநிலைக் குறிப்பிற்குப் பின் நிகழ்ந்த நிகழ்வுகள் என்பது இருப்புநிலை குறிப்பு தேதி மற்றும் நிதி அறிக்கை அங்கீகரிக்கப்பட்ட நாட்களுக்கு இடையே நிகழ்ந்த நிகழ்வுகள்.

4. **முந்தைய கால வகைகள்:**

முந்தைய ஆண்டு நிதி அறிக்கைகள் தயாரிப்பதில் உள்ள வரவு, செலவு பிழைகள் நடப்பு ஆண்டில் குறிப்பிடுவது முந்தைய காலச் சரி கட்டுதல் ஆகும். முந்தைய ஆண்டிற்கான வரவு செலவு வைப்பு கணக்கையும் தேவையிருந்தால் ஏற்றுக்கொள்ளலாம். மேலும் வரவு செலவு தொடர்பான முந்தைய ஆண்டுகளோடு தொடர்புடைய இந்த ஆண்டு செலவுகள் கூட முந்தைய வகைகளாக கருதப்படுகிறது.

5. **தேய்மானம்:**

அசையாச் சொத்துக்களின் தேய்மானம் ஒரே தொகை முறையில் பதிவு செய்யப்படுகின்றன, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட உரிய தேய்மான விகிதப்படி தேய்மானம் கணக்கிடப்பட்டுள்ளது. சொத்துக்களின் தேய்மானம் வருடத்தில், செப்டம்பர் 30ம் தேதிக்கு முன் கணக்கில் கொள்ளப்பட்ட சொத்துக்களுக்கு ஒரு வருட தேய்மானமும், அக்டோபர் மாத ஆரம்பத்தில் இருந்து மார்ச் மாதம் முடிய புதியதாக சேர்த்துக்கொள்ளப்பட்ட சொத்துக்களுக்கு அரை ஆண்டு தேய்மானமும் கணக்கிடப்படுகிறது. மார்ச் மாதத்தில் சேர்க்கப்பட்ட சொத்துக்களுக்கு தேய்மானம் விடுவிக்கப்பட்டுள்ளது. முன்னேற்றத்தில் உள்ள திட்டப்பணிகள் முடிவடைந்து உபயோகத்திலுள்ள சொத்துக்களின் தேய்மானம் முடிப்பதற்காக காத்திருந்த போதிலும் (நேர்கோட்டு முறையில்) ஒரே தொகை முறையில் 5 சதவிகிதமும் கணக்கிடப்படுகிறது.

6. **வருவாய் ஏற்பு :**

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் ஈட்டிய ஆதாயத்தில் அடிப்படையிலான கணக்குமுறையை பின்பற்றுகிறது. ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லாவிதமான வரவுகளும் செலவினங்களும் வரவேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்கு அடிப்படையில் நடப்பு ஆண்டில் கணக்கிடப்பட்டுள்ளது. பணியாளர்களின் கடனுக்கான வட்டி மற்றும் ஓய்வூதிய கால பலன்கள் ரொக்கமாக கணக்கிடப்பட்டுள்ளது.

7. **ஐயப்பாடுள்ள கடன்கள்:**

குடிநீர் வரி மற்றும் குடிநீர்க் கட்டணம் செலுத்தும் சில்லறைக் கடனாளிகள் ஐயப்பாடுள்ள கடன்களுக்காக, அளவுமானி உள்ளோருக்கும், அளவுமானி இல்லாதோருக்கும் முறையே 20 சதவீதம் மற்றும் 10 சதவீதமும் மற்றும் வரிகளுக்கு 10 சதவீதமும் வேறுபடும் தொகையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8. **அசையாச் சொத்து :**

அசையாச் சொத்து எனப்படுவது கொள்முதல் விலை அல்லது கட்டமைப்பு செலவிலிருந்து வந்த அசையாச் சொத்தின் மீதான தொடர் தேய்மான மதிப்பீட்டை கழிக்கப் பெறுவது ஆகும். அசையா சொத்துக்கான செலவு எனப்படுவது அடிப்படை செலவு மற்றும் நிறுவனத்திற்காக செலவழிக்கப்படும் செலவு முதல் அதை பயன்பாட்டுக்கு கொண்டு வரும் வரை செலவழிக்கப்படும் அனைத்து செலவுகளை உள்ளடக்கியது ஆகும். திட்டவளர்ச்சி செலவினங்கள் திட்டத்தை நடைமுறை படுத்துவதற்காக செய்யப்படும் அனைத்து செலவினங்களையும் குறிக்கும். திட்டத்தை நடைமுறை படுத்துவதற்காக கொடுக்கப்படும் ஊதியம், சம்பளம், மற்றும் இதரபடிகள், அலுவலக செலவுகள், நிர்வாகச் செலவுகள், எரிபொருள் மற்றும் மசகு ஆகியவற்றில் விகிதாச்சாரம் வாரியத்தால் முடிவு செய்யப்பட்டுள்ளது.

9. **மானியம் :**

அரசிடமிருந்து பெறப்படும் மானியம் தனியாக காண்பிக்கப்படுகிறது. இந்த வகையான மானியத்திற்காக தொகை ஏதும் திருப்பி செலுத்தப்பட்டதாக தெரியவில்லை.

10. **முதலீடுகள் :**

பொதுவாக முதலீடு எனப்படுவது ரொக்கமாக வங்கிகளில் செலுத்தப்படும் குறித்த கால வைப்பு தொகை. அந்த வைப்பு தொகை மீது பெறப்படும் வட்டி, வரவு மற்றும் செலவு கணக்குகளில் வரவு வைக்கப்படும். இந்த வைப்பு தொகை அல்லாத மற்ற நிதிகள் அல்லது வளர்ச்சி திட்ட முதலீடுகள் மீது பெறப்படும் வட்டி அந்த நிதி திட்ட முதலீடு கணக்கில் வரவு வைக்கப்படும்.

11. **ஓய்வூதிய பணியாளர்களின் பலன்கள்:**

பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஓய்வு கால நிதி நலன்கள் ரொக்க அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

**12. கடன்களின் மதிப்பு :**

சொத்து வாங்குவதற்காக வாங்கும் கடன் மீதான செலவுகளையும் அந்த சொத்து மதிப்பின் மீது முதலீடு செய்யப்படும்.

**13. ஒதுக்கீடு, நிச்சயமற்ற பொறுப்புகள் :**

வாரியத்திற்கு எதிரான நீதிமன்றத்திலுள்ள ஒவ்வொரு வழக்கும் சட்டபடியாக உண்மையான மதிப்பாய்வு செய்யப்பட்ட போதும் வாரியம் கடனாக ஏற்றுக் கொள்ளாமல் சில்லறைக் செலவினப் பொறுப்பாக வைத்துள்ளது.

**14. சரிசெய்யப்பட்ட இழப்பீடுகள் :**

சரிசெய்யப்பட்ட இழப்பீடுகள் இதர வருமானமாக கருத பட வேண்டும்.

## அட்டவணை – கூ
## 2016 மார்ச் 31 ஆம் தேதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்குகள் மீதான குறிப்புகள்
## இருப்பு நிலைப்பட்டியலுக்கான குறிப்புகள்

**I. அட்டவணை – எ – பங்குகள்**

**1. பொதுமக்களிடமிருந்து பெறப்படும் பங்குகள் :**

குடிநீர் / கழிவு நீர் இணைப்புப் பணிகளுக்காக பொது மக்களிடமிருந்து கடந்த நிதியாண்டில் பெறப்பட்ட தொகையான ரூ.593.13 கோடி (சென்ற ஆண்டு –ரூ.583.20 கோடி) நடப்பு ஆண்டில் பொதுமக்களின் பங்குக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.

**2. கடன் பொறுப்புகளுக்கு மேற்பட்ட கூடுதல் சொத்துகள் :**

சென்னை மாநகராட்சி, பொதுப்பணித்துறை மற்றும் இடைக்கால வாரியம் போன்றவற்றிலிருந்து முறையே ரூ. 15.92 கோடி, ரூ. 5.19 கோடி மற்றும் ரூ. 0.08 கோடி பெறப்பட்ட கடன் பொறுப்புகளுக்கும் மிகையான தொகை என குறிப்பிடப்பட்ட தொகை சென்னைக் குடிநீர் வாரியத்தில் நீண்ட காலமாக தொடர்ந்து நிலுவையில் இருந்து வருகிறது. இந்த தொகைகள் அட்டவணை – எ – பங்குகள் முந்தைய ஆண்டுகளின் நடைமுறைகளின் படி காட்டப்பட்டுள்ளது.

**3. சொத்துக்கள் மீதுள்ள அதிகபடியான கடன்கள் :**

முன்னாள் 42 உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து மாற்றப்பட்ட சொத்துக்கள் மீதான அதிகபடியான கடன்கள், 31 மார்ச் 2016ன் படி மொத்தக்கூட்டு தொகையான ரூ.43.69 கோடி (சென்ற ஆண்டு ரூ. 43.69 கோடிகள்) கடந்த ஆண்டின் வழக்கப்படி அட்டவணை எ – பங்காரிப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

**4. மூலதன இருப்புகள் :**

அ) சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் வழியாக விண்ணப்பம் செய்பவரிடம் நேரடியாக நடப்பு ஆண்டில் உள்கட்டமைப்பு மேம்பாட்டு கட்டணமாக பெறப்பட்ட ரூ.47.23 கோடி (சென்ற ஆண்டு ரூ. 33.59 கோடி) மூலதன இருப்பு ஒதுக்கீடு கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

**5. நிதி :**

நிதி என்று குறிக்கின்ற நிலையான சொத்துக்களை புதுப்பிக்கும் நிதிக்காக ரூ. 110.56 கோடி அளவிற்கு முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ. 70.90 கோடி அளவிற்கு முதலீடு செய்யப்பட்டுள்ளது. நிதிக்கணக்கில் உள்ள நிலுவை, கடந்த வருடங்களில் சேர்ந்துள்ள நிலையான சொத்துக்களுக்கு எதிராக ஒதுக்கீடு செய்யப்படாத நிதியைக் குறிக்கிறது.

**II. அட்டவணை – பி– அரசு மானியங்கள் – ரூ. 3145.59 கோடி (சென்ற ஆண்டு ரூ. 3145.59 கோடி)**

சென்னை நகர குடிநீர் திட்டம் II, சென்னை நகர நதிநீர் பாதுகாப்புத் திட்டம், நகர உள்ளாட்சி மானியங்கள் திட்டம், போன்ற வெவ்வேறு திட்டங்களுக்கு அரசிடமிருந்து பெறப்பட்ட மானியங்கள் தனித்தனியே கீழ்கண்டவாறு காண்பிக்கப்பட்டுள்ளது:

1. **அரசு மானியம் (சென்னை நகர குடிநீர் திட்டம் II மற்றும் சென்னை நகர நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம்) – ரூ. 488.97 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 488.97 கோடி)**

மார்ச் 31, 2016 அன்றைய நிலுவையிலுள்ள மீத தொகை நிலவரப்படி, மேலே குறிப்பிட்டுள்ள திட்டங்களுக்கு முறையே சென்னை நகர குடிநீர் திட்டம் II 2008–09க்கு முன்பு உள்ளபடி ரூ. 137.38 கோடி என்ற தொகையாகவும் மற்றும் சென்னை நகர நதிநீர் பாதுகாப்புத் திட்டத்திற்கு 2009–10லிருந்து தொடர்ந்து ரூ.351.59 கோடி ஆகவும் நீடிக்கிறது.

2. **அரசு மானியம் (ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம்) – ரூ. 302.51 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 269.06 கோடி)**

2015–16 ஆண்டில் பற்பல திட்டங்களை செய்து முடிப்பதற்காக மானியமாக ரூ.33.45 கோடியை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் (ஜநேதேநபுதி) கீழ் சென்னை குடிநீர் வாரியத்தால் பெறப்பட்டுள்ளது.

3. **பொறுப்புரிமை மாற்றம் நிதி – ரூ. 314.78 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 268.55 கோடி)**

மேலே குறிப்பிட்டுள்ள நிதியின் மீதமுள்ள தொகை, மாநில வரி வருவாயிலிருந்து மானியமாக நிலையான சதவிகிதத்தில் பொது மேம்பாட்டு திட்டங்களுக்கு பயன்படுத்துவதற்காக பெறப்பட்ட தொகையாகும்.

முடிவடைந்த 31 மார்ச் 2016 ஆண்டு முடிய பெறப்பட்ட தொகை ரூ. 46.23 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 58.24 கோடி) மார்ச் 2015 முதல் ஜனவரி 2016 வரை மானியமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. பிப்ரவரி 2016 மற்றும் மார்ச் 2016 வரை மொத்த மானியமாக ரூ. 8.97 கோடி ஏப்ரல் 2016ல் பெறப்பட்டுள்ளது. இதனால் தற்போதைய நிதியாண்டில் கணக்கிடப்படவில்லை.

4. **அரசுமானியம் (சென்னை பெருநகர திட்டம்) – ரூ. 598.58 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 383.65 கோடி)**

நடப்பாண்டில் பெருநகர திட்டத்திற்காக ரூ. 214.93 கோடியை மானியமாக முறையே 2011–12, 2012–13 மற்றும் 2013–14 ரூ. 25.97 கோடி, ரூ.45.68 கோடி மற்றும் ரூ. 143.28 கோடி தமிழ்நாடு அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2011–12, 2012–13 மற்றும் 2013–14 ம் ஆண்டிற்காக ஒப்புதல் அளிக்கப்பட்டு மற்றும் பெறப்பட்ட மானிய தொகைகள் முறையே ரூ. 189 கோடி, 390.20 கோடி, மற்றும் ரூ. 513.33 கோடிகளாகும்.

5. **அரசிடமிருந்து பெறப்பட்ட மானியம்–மற்றவை ரூ. 778.69 கோடி (சென்ற ஆண்டு – ரூ.652.39 கோடி)**

நெம்மேலி கடல் நீரை குடிநீராக்கும் திட்டம், கழிவுநீர் கலப்பதைத் தடுத்தல் திட்டம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் பணிகள், வெள்ளம் வறட்சி பணிகள் மற்றும் தமிழ்நாடு போன்ற திட்டங்களுக்காக கூடுதல் மானிய உதவிக்காக அரசிடமிருந்து ரூ.126.30 கோடி பெறப்பட்டுள்ளது.

**III. அட்டவணை – சி – நீண்ட கால கடன்கள்**

1. **அரசிடமிருந்து பெற்ற கடன் ரூ. 727.51 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 727.51 கோடி)**

அரசிடமிருந்து பெறப்பட்ட முதல் மற்றும் இரண்டாவது சென்னைக் குடிநீர் திட்டங்களுக்கும், வேறு திட்டங்களுக்கான கடன்கள் இந்த கணக்கில் காட்டப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் அசல் மற்றும்

வட்டி வகைகள் இந்தக் கணக்கில் திருப்பி செலுத்தவில்லை. 31 மார்ச் 2016ல் தவணை கடந்த நிலுவையாக அசலும் வட்டியும் சேர்ந்து மொத்தம் ரூ. 1204.81 கோடிகளாகும்.

2. <u>நிதி நிறுவனங்களிலிருந்து பெற்ற கடன்கள் ரூ. 449.81 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 492.31 கோடி)</u>

அ) முன்னாள் உள்ளாட்சி அமைப்புகள் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாட்டுநிறுவனம் மற்றும் தமிழ்நாடு நகரப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனங்களிலிருந்து கடன் பெற்றுள்ளன. 2012ம் ஆண்டு முதல் 2031ம் ஆண்டு வரை தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனத்திடம் கடனாக பெறப்பட்ட திருத்திய அசல் தொகை முறையே ரூ. 129.73 கோடி மற்றும் ரூ.34.87 கோடி ஆகும். மொத்தத் தொகை ரூ. 164.60 கோடியை மேற்கான் இரு நிதி நிறுவனங்களின் கடன்களை தீர்க்க வாரியம் தமிழக அரசிடமிருந்து மானியமாக வழங்க அனுமதியுள்ளது.

ஆ) நடப்பாண்டில் உள்ள 14 திட்டத்திற்காக ரூ. 14.24 கோடியை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் (ஜநேதேநபுதி) கீழ் கடனாக வழங்க தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் ஒப்புதல் அளித்துள்ளது.

IV. <u>அட்டவணை – டி – நிறுத்தி வைக்கப்பட்ட வரவுகளும் வைப்பு தொகைகளும்</u>

1. <u>சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்திற்காக பெறப்பட்ட தொகை ரூ. 5.22 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 2.34 கோடிகள்)</u>

அந்தந்த தொகுதிகளில் குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பின் தர மேம்பாட்டிற்காக நடப்பாண்டில் ரூ. 2.88 கோடி பெறப்பட்டுள்ளது.

V. <u>அட்டவணை – இ – நடப்பு பொறுப்புகளும் ஒதுக்கீடுகளும்</u>

1. <u>இதர கடன்கள் தொழிலாளர், பொது வைப்பு நிதி (ரூ. 36.04 கோடிகள்) (சென்ற ஆண்டு – ரூ. 40.79 கோடி)</u>

பொது வைப்பு நிதி பணியாளர்களுக்கு முன்பணம் கொடுத்ததின் மீத தொகையிலிருந்து பணியாளர்களின் பங்களிப்பாக கருதப்படுகிறது.

2. <u>மற்ற பொறுப்புகள் – மற்றவை</u>

அ) பேரேடு எண்கள் 5390, மற்றும் 5410இல் இருக்கும் இருப்பு தொகை ரூ.0.33 கோடி வெகுகாலமாக நிலுவையிலுள்ளது.

ஆ) பேரேடு எண்கள் 5250, 5311, 5315, 5370, 5450, 5451, 5520, 5530, 5580, 5600, 5630, 5650, 5660, 5760, 5810, மற்றும் 9009 ஆகிய கணக்குகளில் உள்ள பற்று நிலுவைத் தொகை ரூ. 169.92 கோடி சரிசெய்யப்பட உள்ளது.

VI. <u>அட்டவணை – எப் – நிலையான சொத்துக்கள்</u>

1. நிலையான சொத்துக்களில் ரூ. 81.40 கோடி சேர்க்கப்பட்டு முன்னேற்றத்திலுள்ள மற்றும் நிறைவறிக்கை பெறப்படாத மூன்று திட்டப்பணிகள் அதாவது இரண்டாவது சென்னை நகர குடிநீர்

திட்டப்பணி, நாளொன்றுக்கு 530 மில்லியன் குடிநீர் வழங்கும் திட்டப்பணி மற்றும் சென்னை நகர நதி நீர்ப் பாதுகாப்பு திட்டப் பணிகள் ஆகும். 2015–16 நடப்பாண்டில் நிலவும் நடைமுறைபடி மேலே குறிப்பிட்டுள்ள நியமித்த திட்டப்பணிகளுக்கு ஒரே தொகை சீரான முறையில் தேய்மானத் தொகை (5%) ரூ. 4.07 கோடி அளிக்கப்பட்டது.

2. முன்னேற்றத்திலுள்ள பணி திட்டங்கள்/கழிவு நீரகற்றல்/வைப்புத் தொகை பணிகள், நிறைவறிக்கை பெறப்படாத ரூ. 166.36 கோடிகள் சென்னை நகர நதி நீர்ப் பாதுகாப்பு திட்டம் மதுரை மற்றும் கும்பகோணம் கழிவு நீரகற்றுப் பணிகள் (மதுரை ரூ. 114.39 கோடி மற்றும் கும்பகோணம் ரூ. 51.97 கோடி) உள்ளடங்கும். ஆயினும் பிரதான பகுதிக்கு முடிவறிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளது. சில முழுமையான நிறைவு அறிக்கைகள் நிலுவையில் உள்ளது. அவற்றிலுள்ள தொகையை திட்ட முன்னேற்றத்தில் காட்டப்பட்டுள்ளது.

3. திட்டப்பணிகளுக்கு பெறப்படும் வைப்பு அந்தந்த திட்டங்களுக்கு செலவிடப்படுகிறது. வைப்பு நிதி பற்றாக்குறையை பொறுத்து வாரிய நிதி திட்டப்பணிக்கு பயன்படுத்தப்படுகிறது. இந்த நிதிக்கு வட்டி விதிக்கப்படுவதில்லை. இதேப்போல் வைப்பு நிதி கூடுதலாக இருக்கும் பட்சத்தில், வாரியம் பின்பற்றும் வழக்கு முறைப்படி கூடுதல் வைப்புகளுக்கு உண்டான வட்டியை வாரியம் தருவதில்லை.

4. ஊதியம், கூலி மற்றும் படிகளின் செலவினங்கள் மற்றும் நிர்வாகச் செலவுகள், எரிபொருள் மற்றும் மசகு எண்ணெயின் செலவுகள் முன்னேற்றப் பணிகளுக்காக கையகப்படுத்தப்படுகிறது. அவற்றின் சரிமுறை விகித விழுக்காடுகள் முறையே 23%, 30%, மற்றும் 30% ஆகும்.

5. சில முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தவரை, அவற்றால் உபயோகப்படுத்தப்பட்ட சில சொத்துக்கள் அவற்றிற்கு உரிமை இல்லாதவையாகும். அச்சொத்துக்கள் அவற்றின் உபயோக உரிமையில் இருந்தாலும் அத்தொகைகளை நஷ்டஈட்டுடன் உரிமையாளருக்கு மாற்றம் செய்வது அல்லது தற்போது இருக்கும் நிலைமையே தொடர்வது போன்றவை இறுதி செய்யப்படவில்லை.

6. 2010–11ம் ஆண்டிலிருந்து நடைபெறும் வறட்சி நிவாரண பணிகளுக்கான தொகையான ரூ. 107.85 கோடி மற்றும் ரூ. 2.77 கோடி நிலையான சொத்துக்களில் உள்ளடங்கும். இவ்வாறான சொத்துகளுக்கு தேய்மானம் ஏதும் கருத்தில் கொள்ளப்படவில்லை. இச்சொத்துக்கள் பழமையானது மற்றும் வேலைத் திறனற்றவை என்பதால் தக்க அதிகார ஒப்புதலுடன் அவற்றை தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்க தயார் செய்யப்படுகிறது.

7. முந்தைய ஆண்டுகளில் செயல்பாட்டில் வந்துள்ள நிலையான சொத்துக்கள் நடப்பு ஆண்டில் முதலீட்டு சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து முற்றுப் பெற்றதற்கான சான்றிதழ் பேரில் முதலீட்டுக் கணக்கில் கீழ்கண்ட வகைப்பாடுகளில் கீழ் கொண்டு வரப்படுகிறது. அதாவது குடிநீர், கழிவுநீர் மற்றும் பொது ஆகியவற்றின் மொத்தத் தொகையாக ரூ. 168.91 கோடி கொண்டு வரப்படுகிறது. இதற்கு மொத்தமாக ரூ. 13.70 கோடி தேய்மானத்திற்கு கணக்கிடப்பட்டுள்ளது. மேலும் இவை முந்தைய கால சரிகட்டிய கணக்கில் கணக்கிடப்படுகிறது.

## VII. அட்டவணை – III – நடப்புச் சொத்துக்கள், கடன்கள், முன்பணம் மற்றும் வைப்புத் தொகை

### 1. சரக்குகள் – ரூபாய் 8.32 கோடிகள் – (சென்ற ஆண்டு – ரூ. 11.18 கோடிகள்)

அ) 31 மார்ச் 2016 தேதியிலான, பொருட்கள் விவரப் பட்டியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக, அசையாத மற்றும் வழக்கற்றுப்போன பொருட்களுக்கு அடையாளம் காணப்பட்டு மாற்று நடவடிக்கை அல்லது ஏலத்திற்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஆ) 2011 ஆம் ஆண்டிலிருந்து கீழ்க்காணும் பொருட்கள் விவரப்பட்டியலில் 2 கணக்குகளில் எவ்வித நடவடிக்கைகளோ /நடவடிக்கைகள் தொடர்ச்சியற்றும் இருப்பதால், அது சம்பந்தமாக ஒத்திசைவு தொடங்கப்பட்டுள்ளது.

பண்டகசாலையின் இருப்பு குறைவு (பேரேடு எண் – 8240) – ரூ.1.94 கோடி (பற்று இருப்பு)

பண்டகசாலையின் இருப்பு மிகை (பேரேடு எண் – 8230 – ரூ.1.88 கோடி (வரவு இருப்பு)

இ) சரக்கு கிடங்கு தனிக் கணக்கில் ரூபாய் 5 லட்சம் ( மண்டல அலுவலகம் – 2 ரூ.3.46 லட்சம் மற்றும் தலைமை அலுவலகம் ரூ. 1.54 லட்சம் ஆகியவை உள்ளடக்கியதாகும்)

ஈ) ஏழு பண்டகசாலைகளில் அதாவது ஈடிசி பண்டகசாலை, கேபிளஸ் மற்றும் பகுதி–

பத்து அலுவலக பண்டக சாலை– 3, 4,5,7,10 மற்றும் 12 ஆகியவற்றில் பொருள் விவரப் பட்டியலில் அளித்துள்ள சான்றிதழில் காணப்படும் தொகையும் சம்பந்தப்பட்ட பண்டகசாலை பேரேட்டில் உள்ள 8200, 8213, 8214, 8215, 8217, 8220 மற்றும் 8222 நிலுவையில் உள்ள இருப்புத் தொகையும் ஒத்துப் போகவில்லை. இதற்கு ஒத்திசைவு செய்யப்படுகிறது.

உ) பொருட்கள் விவரப்பட்டியல், சரிக்கட்டுதல் கணக்கில் உள்ள நிலுவை இருப்புத் தொகை பண்டகசாலை கட்டுப்பாட்டுக் கணக்கு, பண்டக சாலை இருப்பு சரிக்கட்டுதல், உள்ளே வரும் பொருட்பட்டியல் மதிப்பீடு, பொருட் பட்டியல் வள ஆதாரங்கள் ஆகியவை உள்ளடங்கியது, நிலை இருப்பை போக்குவதற்கோ/திரும்பப் பெறுவதற்கோ சரிசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளது.

### 2. சில்லறைக் கடனாளிகள் – ரூ. 235.74 கோடி

அ) 31 மார்ச் 2016 வரை வாரியம் பின்பற்றும் கொள்கை விதிகளின்படி சந்தேகத்திற்குண்டான கடன்களுக்கு குடிநீர் கட்டணம் மற்றும் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரிகளின் தலைப்பின் கீழ் சிறு கடனாளிகளுக்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

ஆ) நடைமுறையிலுள்ள கொள்கைப்படி, கழிவுநீரகற்று சேவை கட்டணத்திற்கான சில்லறை கடனாளிகள் மீதான ஐயப்பாடுள்ள கடன்களுக்கு ஒதுக்கீடு கருதப்படவில்லை.

இ) வாரியத்தின் குழுமப் பணிக்கொடை பொறுப்பாட்சி கணக்கின் கீழ் வரும் ரூபாய் 1.21 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 1.21 கோடி) சில்லறை கடனாளிகளில் உள்ளடங்கும்.

3. **தலைமை அலுவலக / பகுதி அலுவலக பரிவர்த்தனை – ரூ. 100.96 கோடி**

தலைமை அலுவலக/பகுதி அலுவலக நடவடிக்கை கணக்கில் இருக்கும் மீதமுள்ள நிலுவைத் தொகை ஒத்திசைவு செய்யப்படுகிறது.

4. **வசூல் கட்டுப்பாடு கணக்கு ரூ. 4.07 கோடி**

வசூல் கட்டுப்பாட்டில் உள்ள மீதி நிலுவை தொகை ஒத்திசைவில் உள்ளது.

5. **வங்கிகளில் உள்ள குறுகிய கால வைப்புத் தொகை ரூ. 306.63 கோடி**

31 மார்ச் 2016 தேதியிலான வங்கிகளில் குறுகிய கால வைப்புத் தொகையின் விவரங்கள் சரிசெய்யப்படுகிறது.

6. **கடன் மற்றும் முன் பணம் ரூ. 26.26 கோடி**

**கடன் மற்றும் முன் பணங்கள் – செலவினங்கள் – ரூ 1.63 கோடி (சென்ற ஆண்டு– ரூ. 1.56 கோடி)**

மேலே குறிப்பிட்டவை, தென்னக ரயில்வேக்கு முன் பணமாக கொடுக்கப்பட்டு ஒன்பது வருடங்களுக்கு மேலாக நிலுவைத் தொகையாக உள்ள ரூ. 0.67 கோடி உள்ளடங்கியதாகும்.

7. **வைப்புத்தொகை மற்றும் முதலீடு – ரூ. 315.51 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 284.54 கோடி)**

அ) **வைப்புத்தொகை மற்றும் முதலீடுகள் – பணியாளர்கள் / பிறர்**

31 மார்ச் 2016ல் வங்கிகளில் வைப்புத் தொகை, பொது பேரேட்டிலுள்ள நிலுவைத்தொகையும் நிதித் துறை பதிவேட்டிலுள்ள நிலுவை தொகையும் வேறுபடுகிறது. இவை ஒத்திசைவு செய்யப்படுகிறது.

ஆ) ஓய்வூதிய முதலீட்டு கணக்கில் (பேரேடு 8523) மற்றும் ஓய்வூதிய பங்களிப்பு திட்டம் (பேரேடு 8524) சேர்ந்துள்ள வட்டி, 31.3.2016ம் தேதியில், ரூ. 25.52 கோடி மற்றும் 0.15 கோடி வரவு இருப்பாக உள்ளது. அதற்கான விவரங்கள் ஆய்வு மற்றும் ஒத்திசைவில் உள்ளது.

இ) அதிகரித்துள்ள வட்டி – மற்ற கணக்கில் (பேரேடு 8520) 31 மார்ச் 2016, உள்ளபடி ரூ.12.58 கோடி பற்று இருப்பாக உள்ளது. அதற்கான விவரங்கள், ஆய்வு மற்றும் ஒத்திசைவில் உள்ளது.

**வரவு–செலவு கணக்கிற்கான குறிப்புகள்**

I. **அட்டவணை – எச் – குடிநீர் விற்பனை மற்றும் கழிவுநீரகற்றல் கட்டணம்**

**குடிநீர் விற்பனை – அளவி பொருத்தப்படாதது – வீட்டு உபயோகம் ரூ. 35.91 கோடி (சென்ற ஆண்டு ரூ. 33.45 கோடி)**

இந்த கணக்கில் காட்டப்பட்டிருக்கும் தொகை உள்ளாட்சி அமைப்புகளின் தொகையையும் உள்ளடக்கியதாகும். ஆயினும், இக்கட்டணங்களை வாரியத்தின் ஒப்புதல் படி உள்ளாட்சிகள் நிர்ணயம் செய்திருந்த கட்டணமே வசூலிக்கப்பட்டுள்ளது.

II. **அரசு மானியம் மற்றும் உதவித் தொகை– ரூ. 387.45 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 206.97 கோடி)**

1. மீஞ்சூர் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்திலிருந்து வாங்கிய குடிநீர் அரசிடமிருந்து பெற்ற மானியத் தொகை ரூ.175 கோடியும் மேற்கண்டவற்றில் உள்ளடங்கிய தொகையாகும்.

2. 2011–12ம் ஆண்டு முதல் 2013–14 ஆண்டு வரை நெம்மேலி திட்டத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு செலவுகளுக்காக ரூ.104 கோடியை வழங்க அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது. அதில் ரூ. 35 கோடியை நடப்பு நிதியாண்டில் விடுவிக்கப்பட்டுள்ளது.

3. 2013–14ம் ஆண்டு மற்றும் 2014–15ம் ஆண்டு, சென்னை மாநகர் கூடுதல் பகுதி அலுவலகங்களுக்காக செய்யப்பட்ட இயக்குதல் மற்றும் பராமரிப்பு செலவுகளுக்காக ரூ.38.18 கோடி இயக்குதல் மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து மானியமாக வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. அதில் ரூ. 31.63 கோடி நடப்பு நிதியாண்டில் பெறப்பட்டுள்ளது.

III. அட்டவணை – ஐ – குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி

குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரி– ரூ. 163.56 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 154.78 கோடி)

குடிநீர் மற்றும் கழிவுநீர் வரியில் காட்டப்பட்டிருக்கும் தொகையை முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் வரித் தொகையையும் உள்ளடக்கியதாகும்.

IV. அட்டவணை – ஜே – இதர வருமானம்

அ) வங்கியிலிருந்து பெறப்படும் வட்டி ரூ. 20.96 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 12.15 கோடி)

31.03.2016 அன்று வங்கியில் குறித்த கால உள்ள வைப்புத் தொகை ரூபாய் 306.63 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 104.15 கோடி). நடப்பாண்டில் வைப்புத் தொகையில் சேர்ந்துள்ள வட்டி ரூ. 8.81 கோடியாகும்.

ஆ) தள்ளுபடி வருமானம் – ரூ. 1.86 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 3.64 கோடி)

குறிப்பிட்ட கால கெடுவிற்கு முன்பே திட்டத்திற்கான பொருட்களை வழங்குபவர்க்கு பணம் செலுத்துகின்ற போது, வாரியம் அளிக்கும் கழிவுத் தொகையை மேற்கண்டது குறிக்கின்றது.

இ) கழிப்பொருள் விற்பனை – ரூ. 0.12 கோடிகள் (சென்ற ஆண்டு – ரூ. 2.84 கோடிகள்)

தகுந்த அதிகாரங்களின் உத்திரவின்படி, நடப்பு ஆண்டில் உபயோகமற்ற மற்றும் வழக்கிலில்லாத பொருட்கள் கழிப்பொருளாக்கப்பட்டு தொகையை வாரியத்தால் பெறப்பட்டுள்ளது.

V. அட்டவணை – எல்– பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் ஒதுக்கீடுகள்:

i. ஓய்வூதியம்

சேர்திரள் ஓய்வூதிய இருப்பு ரூ. 92.54 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 92.25 கோடி) . அதில் ரூ. 136.95 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 114.74 கோடி) தொகை முதலீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ரூ. 12.67 கோடி (சென்ற ஆண்டு – ரூ. 11.92 கோடி) பங்குத் தொகை பெறும் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் முதலீடு செய்யப்பட்டுள்ளது. ஓய்வூதிய நடைமுறை மதிப்பீடு, ஆலோசர்களுடன் கலந்துரையாடப்பட்டு, பொறுப்பை உறுதிப்படுத்திய பின்னர் கணக்கில் கொண்டு வரப்படும்.

**2. பணிக்கொடை**

அ) இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் பணிக்கொடை குழுமநிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திலுள்ள பங்குத் தொகை வருவாய்க்கான கணக்கில் உள்ளது.

ஆ) பணிக்கொடை நடைமுறை மதிப்பீடு, ஆலோசகர்களுடன் கலந்துரையாடப்பட்டு, பொறுப்பை உறுதிப்படுத்திய பின்னர் கணக்கில் கொண்டு வரப்படும்.

**3. விடுப்பைப் பணமாக்குதல்**

பணியாளர்கள் ஓய்வு பெறும்போது விடுப்பைப் பணமாக்கிய தொகை ரொக்க அடிப்படையில் வரவு செலவு கணக்கில் காட்டப்படுகிறது.

**VI. அட்டவணை – ஓ – கடன் சேவைக் கட்டணம்**

நடப்பாண்டில், நிதி நிறுவனங்களில் இருந்து கடன் வட்டி ரூ. 29.27 கோடி, இதில் ரூ. 8.76 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது.

**VII. வருமானம் மீதான வரி**

தொடர்ந்து ஏற்படும் இழப்புகளை கருத்தில் கொண்டு, வரிப் பொறுப்புகள் எதிர் காலத்தில் ஏற்படாது என்பதால் ஒத்திவைக்கப்பட்ட வரிகள் மீது ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை.

**VIII. மற்றவை**

**1. நிச்சயமற்ற பொறுப்புகள்**

வாரியத்திற்கு எதிராக நீதிமன்றங்களிலுள்ள 161 வழக்குகளில் (சென்ற ஆண்டு 255 வழக்குகள்) கேட்ட தொகையான ரூ. 11.05 கோடியை (சென்ற ஆண்டு ரூ. 17.05 கோடி) வாரியம் கடனாக ஏற்றுக்கொள்ளவில்லை.

2. மூன்றாம் நபர் நிலுவைகள் ஒத்திசைவு மற்றும் உறுதி படுத்துதலுக்கு உட்பட்டவை.

3. சென்ற ஆண்டின் கணக்கு மதிப்புகள் தேவைப்படும் இடங்களில், இந்த ஆண்டின் வகைப்பாடுகளுக்கேற்ப மறு தொகுப்பு செய்யப்பட்டுள்ளன.

இதே தேதியிட்ட எங்களது அறிக்கையின் படி
எம்.சி. ரெங்கநாதன் மற்றும் குழுமம்
**பட்டயக் கணக்காளர்கள்**
**பதிவு எண். 003061S**

வாரியத்திற்காக

| | | |
|---|---|---|
| --- ஒப்பம்--- | --- ஒப்பம்--- | --- ஒப்பம்--- |
| **கே. முத்துக்குமாரசாமி** | **சத்யபிரதசாஹு, இ.ஆ.ப.,** | **எம்.சி. சாந்தி,** |
| நிதி இயக்குநர் | நிர்வாக இயக்குநர் | கூட்டாளி |
| | | உ.எண். 018606 |

இடம் : சென்னை
நாள் : 17.05.2018

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( சென்னைக் குடிநீர் ) துறை

### சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் செயற்பாடுகள் பற்றிய 31. 03.2016 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான தமிழக அரசின் ஆய்வறிக்கை:

அ. **நிதி (ஆதாரம்) செயல்பாடுகள்**

1. சென்னைப் பெருநகரப் பகுதியில் வாழும் மக்களுக்கு, அதிகரித்து வரும் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வசதி ஆகியவற்றைத் திட்டமிட்ட மேம்பாடு மற்றும் உரிய வழியில் முறைப்படுத்தவும், குறிப்பாக போதிய அளவு பாதுகாக்கப்பட்ட தரமான குடிநீர் வழங்கவும் மற்றும் கழிவுநீரை வெளியேற்றவும், பொதுச் சுகாதாரத்தைப் பாதுகாக்கவும் மற்றும் அவற்றோடு தொடர்புடைய பணிகள் அனைத்தையும் கவனிப்பதற்கென்று 1978ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றுதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28, 1978) கீழ் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் ஏற்படுத்தப்பட்டது.

2. 31–03–2016 ஆம் தேதியில் இவ்வாரியத்தின் சொத்துகளின் மதிப்பு ரூபாய் 7311.53 கோடிகள் ஆகும். இதில் நிலை நிலையான சொத்துகள் ரூபாய் 6240.63 கோடியும், நடப்பு சொத்துகள் ரூபாய் 1070.89 கோடிகள் மதிப்புள்ள கடன்கள், முன்பணம் மற்றும் வைப்பீடுகள் ஆகியவைகள் அடங்கும்.

3. வாரியத்தின் பொறுப்புகள் மொத்தம் ரூபாய் 8460.78 கோடி ஆகும். இதில் பங்குகள் ரூபாய் 1627.25 கோடி, அரசு மானியம் ரூபாய் 3566.50 கோடி, நீண்ட கால கடன்கள் ரூபாய் 1177.33 கோடி மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட வரவுகளும், வைப்புத் தொகை மற்றும் நடப்புப் பொறுப்புகள் ரூபாய் 2109.70 கோடி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

**சென்னைக் குடிநீர் வாரியத்தின் குடிநீர் கட்டணங்கள் குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி பற்றிய வருவாய் விவரங்கள் கீழ்காணும் அட்டவணையில் தெரிவிக்கின்றன:-**

( ரூபாய் இலட்சங்களில்)

| | 2015-16 | 2014-15 |
|---|---|---|
| **அ. குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டணங்கள்** | | |
| **அளவிடப்பட்டது** | | |
| வீட்டு உபயோகத்திற்கு | 1559.86 | 1604.35 |
| வணிகத்திற்கு | 11951.20 | 12345.10 |
| நிறுவனங்களுக்கு | 1213.81 | 1334.12 |
| நகராட்சிகளுக்கு | 873.66 | 1496.17 |
| **அளவிடப்படாதவை** | | |
| வீட்டு உபயோகத்திற்கு | 3591.26 | 3345.27 |
| வணிகத்திற்கு | 1974.01 | 1809.28 |
| நிறுவனங்களுக்கு | 21.28 | 22.20 |
| தனியார்க்கு லாரிகள் மூலம் குடிநீர் வழங்கியது | 3847.36 | 2977.44 |
| கழிவு நீரகற்று கட்டணங்கள் | 2016.54 | 2330.65 |
| கழிவு நீரகற்று வரி | 1450.88 | 1293.90 |
| **மொத்தம் (அ)** | **28499.86** | **28558.48** |
| **ஆ.குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி** | | |
| குடிநீர் வரி | 3496.70 | 3337.82 |
| கழிவு நீரகற்று வரி | 12859.38 | 12140.46 |
| **மொத்தம் (ஆ)** | **16356.08** | 15478.28 |
| **மொத்தம் (அ+ஆ)** | **44855.94** | **44036.76** |

(ரூபாய் இலட்சங்களில்)

| | 2015-16 | 2014-15 |
|---|---|---|
| இ. இதர வருமானம் | 5529.86 | 7979.66 |
| ஈ. ஐயப்பாடுள்ள கடன்களுக்குக் கூடுதல் ஒதுக்கீடு | - | 170.15 |
| உ. அரசு மானியம் | 38745.25 | 20897.05 |
| ஊ. முந்தைய கால சரிகட்டல் கணக்கு | 994.97 | - |
| மொத்த கூட்டுத் தொகை – (அ+ஆ+இ+ஈ+உ+ஊ) | 90126.02 | 73083.62 |
| எ. செலவினங்கள் | 105170.80 | 100804.15 |
| ஏ. பற்றாக்குறை வருவாய் | 15044.78 | 27720.53 |

2004ம் ஆண்டு முதல் குடிநீர் கட்டண வீதத்தில் மாற்றம் செய்யாத காரணத்தினாலும் மற்றும் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான செலவில் ஏற்றம் ஏற்பட்டதாலும் ரூபாய் 150.45 கோடி பற்றாக்குறை ஏற்பட்டது.

4. 2015–2016 ஆம் ஆண்டு மொத்த வருமானம் ரூபாய் 891.31 கோடியாகும். இதில் செலவு ரூபாய் 1041.76 கோடி. இந்த ஆண்டில் பற்றாக்குறை ரூபாய் 150.45 கோடி இருக்க, சென்ற ஆண்டில் (2014–15) பற்றாக்குறை ரூபாய் 277.20 கோடியாகும். வாரியம் அதன் பல்வேறு நோக்கங்களையும், குறிக்கோள்களையும் அடையும் பொருட்டு மொத்த வருமானம் மொத்த செலவை விட குறைவாக இருந்தாலும் அதன் பணிகளை முழு நோக்குடன் சிறந்த முறையில் மேற்கொண்டு வருகிறது.

5. ஒவ்வோராண்டும் குடிநீர் வழங்க நீர் ஆதாரங்களைப் பெருக்குதல் மற்றும் அது சார்ந்த பணிகளைச் செய்வதற்கு வாரியம் பல திட்டங்களை செயல்படுத்துகிறது. ஆகவே, மொத்த வட்டியின் ஒரு பகுதியினைத் திட்டச் செலவுகளுடன் கூட்டி முதலாக்கம் செய்யப்படுகிறது. மொத்த வட்டியான ரூபாய் 90.68 கோடியில் நடப்பு ஆண்டில் மட்டும் ரூபாய் 8.76 கோடி முதலாக்கம் செய்யப்பட்டுள்ளது. வட்டியை முதலாக்கம் செய்யப்பட்ட பின் ரூபாய் 81.92 கோடி வட்டியாக, 2015–16 ஆண்டிற்கான வருவாய் மற்றும் செலவு கணக்கின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டது.

6. குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் கொள்ளளவினை அதிகரித்து மேம்படுத்த வாரியம், கடல் நீரை குடிநீராக மாற்றும் இரண்டு திட்டங்களை செயல்படுத்தி இருக்கிறது. ஒன்று மீஞ்சூரில் உள்ள கடல்நீரைக் குடிநீராக்கி இயக்கி, திருப்பித் தரும் திட்டம், மற்றொன்று ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு உதவியுடன் நெம்மேலியில் அமைந்துள்ள கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் ஆகும்.

## ஆ. செயல்முறை

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் 1978– ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் நிறுவப்பட்டது. சென்னைக் குடிநீர் வாரியம், சென்னைப் பெருநகர் பகுதியின் தேவைக்கேற்ப குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவைகளை தற்போதைக்கும், எதிர்காலத்திற்கும் திட்டமிட்டு மேம்படுத்தி செயற்படுத்துதல், தேவையான உட்கட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் தொலைநோக்கு பார்வையோடு திட்டங்களை நடைமுறைபடுத்துதல் போன்ற முக்கிய பொறுப்புகளைக் கொண்டு இயங்கி வருகின்றது.

தற்சமயம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தனது சேவைகளை, 15 பகுதி அலுவலகங்கள் மற்றும் 200 பணிமனைகள் வாயிலாக 426 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் உள்ள 67.27 இலட்சம் மக்களுக்கு (2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி) வழங்கி வருகிறது. இது தவிர, மேலும் சில உள்ளாட்சி அமைப்புகளுக்கும், மொத்த நுகர்வோருக்கும், மற்றும் தொழிற்சாலைகளுக்கும் தனது சேவையை வழங்கி வருகிறது.

**சென்னைக் குடிநீர் வாரியத்தின் சேவையை பெறும் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் மொத்த நுகர்வோர்கள்**

| வ. எண். | உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் மொத்த நுகர்வோர்கள் | குடிநீர் வழங்கும் அளவு நாளொன்றுக்கு (மில்லியன் லிட்டரில்) |
|---|---|---|
| 1 | பல்லாவரம் நகராட்சி | 2.90 |
| 2 | பம்மல் நகராட்சி | 3.00 |
| 3 | அனகாபுத்தூர் நகராட்சி | 1.90 |
| 4 | ஆவடி நகராட்சி | 1.10 |
| 5 | பொழிச்சலூர் கிராம பஞ்சாயத்து | 1.20 |
| 6 | கொளப்பாக்கம் கிராம பஞ்சாயத்து | 0.25 |
| 7 | இரயில்வே மற்றும் அரசு மருத்துவமனை | 10.00 |
| 8 | ஆவின் | 0.40 |
| 9 | கன்டோன்மென்ட் –(இராணுவ அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புகள்) | 1.60 |
| 10 | தொழிற்சாலை நுகர்வோர்கள் | 22.88 |
| | மொத்தம் | 45.23 |

## 1. சென்னை நகரின் குடிநீர் ஆதாரங்கள்

சென்னை நகருக்கு நில மேற்பரப்பு நீர், கடல் நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் நிலத்தடி நீர் மூலம் நீர் பெற்று அதன் குடிநீர் தேவையை நிறைவு செய்கிறது.

### 1.1 நில மேற்பரப்பு நீர்

சென்னை நகருக்கு குடிநீர் வழங்க நிலமேற்பரப்பு நீர் ஆதாரம் முதன்மையானவற்றுள் ஒன்றாகும். சென்னைக்கு அருகாமையிலுள்ள நீர்த்தேக்கங்களான பூண்டி, சோழவரம், புழல், செம்பரம்பாக்கம், கடலூர் மாவட்டத்தில் உள்ள வீராணம் ஏரி மற்றும் தெலுங்கு கங்கை திட்டம் ஆகியவை குடிநீர் வழங்கும் முதன்மை மேற்பரப்பு நீர் ஆதாரங்களாகும்.

**சென்னைக்கு குடிநீர் வழங்கும் நீர்த்தேக்கங்களின் கொள்ளளவுகள்**

| வ. எண். | நீர்த்தேக்கங்கள் | மொத்தக் கொள்ளளவு (மில்லியன் கன அடியில்) |
|---|---|---|
| 1 | பூண்டி | 3,231 |
| 2 | புழல் | 3,300 |
| 3 | செம்பரம்பாக்கம் | 3,645 |
| 4 | சோழவரம் | 881 |
| 5 | வீராணம் | 1,465 |
| | மொத்தம் | 12,522 |

புதிய வீராணம் குடிநீர் வழங்கல் திட்டம் சென்னை நகருக்கு கூடுதல் நீர் ஆதாரமாக 2004–ல் துவங்கப்பட்டது. இதன் மூலம் வீராணம் ஏரியிலிருந்து ஆண்டுதோறும் நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் குடிநீர் நகருக்கு கிடைக்கப் பெறுகிறது.

ஆந்திரபிரதேசத்தில் அமைந்துள்ள கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து தெலுங்கு கங்கை திட்டத்தின் மூலம் கிருஷ்ணா நதி நீர் சென்னை நகருக்கு பெறப்பட்டு வருகிறது. ஆந்திரபிரதேசம் மற்றும் தமிழக அரசுகளிடையே கையெழுத்தான ஒப்பந்தப்படி சென்னையின் குடிநீர் தேவைக்கு ஒவ்வொரு ஆண்டும் 12 ஆயிரம் மில்லியன் கனஅடி நீர் வழங்கப்பட வேண்டும். முந்தைய பல வருடங்களில் 4.5 ஆயிரம் மில்லியன் கன அடி முதல் 8.2 ஆயிரம் மில்லியன் கன அடிவரை மட்டுமே நீர் கிடைக்கப் பெற்றது. 2014–15 ஆம் ஆண்டில், 31.08.2015 வரை பெறப்பட்ட நீரின் அளவு 5.569 ஆயிரம் மில்லியன் கன அடி ஆகும்.

கடந்த மூன்று ஆண்டுகளாக மழையின் அளவு சராசரியை விட குறைந்து தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக மழை பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால் சென்னைக்கு குடிநீர் வழங்குவதில் சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு மிகவும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

சென்னை நகர ஏரிகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழையின் அளவு

| வருடம் | மழையின் அளவு (மி.மீ) | | பற்றாக்குறை % |
|---|---|---|---|
| | இயல்பான அளவு | பெய்த அளவு | |
| 2012 | 1293.42 | 981.80 | -24.09 |
| 2013 | 1297.50 | 1064.87 | -17.93 |
| 2014 | 1286.21 | 1025.80 | -20.25 |

## 1.2 கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள்

கிடைக்கக் கூடிய நில மேற்பரப்பு நீர், பருவமழையையே பெரிதும் சார்ந்திருக்கிறது. பருவமழை தேவையான அளவு பொழியாதபோது நீர்த்தேக்கங்களில் கிடைக்கக்கூடிய நீரின் அளவில் அதிக பற்றாக்குறை ஏற்பட்டு அதனால் சென்னை நகரின் குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது. சென்னைக்கு அருகே வற்றாத ஆறுகள் இல்லாததும் குடிநீர் விநியோகம் செய்வதற்கு கூடுதல் சவாலாகிறது. வளர்ந்து வரும் சென்னை மாநகருக்கு குடிநீர் பற்றாக்குறையை நீக்கும் வண்ணம் 2003–04 ஆம் ஆண்டிலேயே தொலைநோக்கு பார்வை கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள், கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவிட அறிவித்தார்கள். அரசு தற்சமயம் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் இரண்டு நிலையங்களை நிறுவி இயக்கி வருகிறது. இந்நிலையங்கள் நகரின் மூன்றில் ஒரு பங்கு குடிநீர் விநியோகத்தை பூர்த்தி செய்கிறது.

### 1.2.1 கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் காட்டுப்பள்ளி–மீஞ்சூர்

நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் காட்டுப்பள்ளி–மீஞ்சூரில் வடிவமைத்து, நிறுவி, சொந்தமாக்கி, இயக்கி மற்றும் திருப்பித் தரும் அடிப்படையில் இயங்கி வருகிறது. இந்த நிலையம் செயல்பாட்டில் உள்ளதுடன் இதன் மூலம் வட சென்னை பகுதிகளாகிய மணலி, மாதவரம், எண்ணூர், கத்திவாக்கம், திருவொற்றியூர், தண்டையார்பேட்டை மற்றும் வியாசர்பாடி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

### 1.2.2 கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் – நெம்மேலி

நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் ஒன்று நெம்மேலியில் ரூ.805.08 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையம் மாண்புமிகு முதல்வர் அவர்களால் 22.02.2013 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இந்நிலையம் செயல்பாட்டில் உள்ளதுடன் இதன் மூலம் தென் சென்னை பகுதிகளாகிய சோழிங்கநல்லூர், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், காரப்பாக்கம், செம்மஞ்சேரி, துரைப்பாக்கம், பெருங்குடி, கொட்டிவாக்கம், பாலவாக்கம், திருவான்மியூர், வேளச்சேரி, தரமணி, பள்ளிப்பட்டு, அடையாறு, பெசன்ட் நகர், நந்தனம், எம்.ஆர்.சி. நகர், இராஜா அண்ணாமலைபுரம் மற்றும் மயிலாப்பூர் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளாக நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பருவமழை தேவையான அளவு பொழியாததனால் கடல் நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையங்களை நாம் சார்ந்து இருக்க வேண்டிய சூழ்நிலை அதிகமாகியதுடன் நகரின் குடிநீர் தேவையை சமாளிக்க இந்த நிலையங்கள் உதவிகரமாக இருந்தது.

### 1.3 நிலத்தடி நீர்

மீஞ்சூர், தாமரைப்பாக்கம், பூண்டி மற்றும் நெய்வேலி ஆகிய நிலத்தடி நீராதாரங்களில் இருந்து சுமார் நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டர் குடிநீர் நகருக்கு விநியோகிக்கப்படுகிறது.

### 1.4 குடிநீர் விநியோக இயக்கம் மற்றும் பராமரிப்பு

2012 முதல் 2014 ஆம் ஆண்டுவரை பருவமழை தொடர்ந்து தேவையான அளவு பொழியாததனால் நகருக்கு விநியோகிக்கப்படும் குடிநீரின் அளவு மறு சீரமைக்கப்பட்டது. தற்போது வாரியம் நாளொன்றுக்கு 540 மில்லியன் லிட்டர் குடிநீரை சென்னை நகருக்கு விநியோகம் செய்கிறது. மேலும் சென்னை மாநகருடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு ஒருங்கிணைந்த குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று சேவைகளை வழங்க சென்னைக் குடிநீர் வாரியம் பல்வேறு திட்டங்களை எடுத்துக்கொண்டுள்ளது.

பாதுகாப்பான குடிநீரினை நகருக்கு விநியோகம் செய்திட சென்னைக் குடிநீர் வாரியம், கீழ்ப்பாக்கம், புழல், செம்பரம்பாக்கம், சூரப்பட்டு, வடக்குத்து ஆகிய இடங்களில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களையும் மேலும் காட்டுப்பள்ளி–மீஞ்சூர் மற்றும் நெம்மேலியில் கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையங்களையும் இயக்கி வருகிறது.

**குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் சுத்திகரிப்புத் திறன்**

| குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் | சுத்திகரிப்புத் திறன் (நாளொன்றுக்கு மில்லியன் லிட்டர்) |
|---|---|
| கீழ்ப்பாக்கம் | 270 |
| புழல் | 300 |
| செம்பரம்பாக்கம் | 530 |
| வடகுத்து | 180 |
| சூரப்பட்டு | 14 |
| கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள்– காட்டுப்பள்ளி – மீஞ்சூர் மற்றும் நெம்மேலி | 200 |
| மொத்தம் | 1494 |

1978–ல் வாரியம் துவங்கப்பட்ட நாளிலிருந்து, குடிநீர் விநியோக இயக்கத்தில் வாரியம் பல படிகளில் முன்னேற்றம் கண்டுள்ளதை காண முடிகிறது.

**குடிநீர் விநியோக இயக்கத்தின் வளர்ச்சி**

| பொருள் | 1978ஆம் ஆண்டில் | 2016ஆம் ஆண்டில் |
|---|---|---|
| செயலாக்கப் பகுதி (ச.கி.மீ) | 174 | 426 |
| மக்கள் தொகை (இலட்சத்தில்) | 28.60 | 71.88 |
| குடிநீர் விநியோகம் (மி.லி) | 240 | 540 |
| குடிநீர் குழாய்களின் நீளம் (கி.மீ) | 1,250 | 6,520 |
| குடிநீர் பகிர்மான நிலையங்கள் | 3 | 74 |
| குடிநீர் சுத்திகரிப்பு திறன் (மி.லி) | 182 | 1,494 |
| நுகர்வோர்களின் எண்ணிக்கை | 1,16,000 | 6,61,405 |

2014–15 ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாய் செலவினம் ரூ.987.26 கோடி எனவும், வாரியத்தின் மொத்த வருமானம் ரூ.497.53 கோடி எனவும் மதிப்பிடப்பட்டது. இதில் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்றல் வரிகளின் மூலம் ரூ.119.10 கோடியும், குடிநீர் மற்றும் கழிவுநீரகற்றல் கட்டணங்களின் மூலம் ரூ.335.65 கோடியும், இதர வருவாய் ரூ.42.78 கோடியும் ஆகும். கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வாங்குவதற்கும் மற்ற நோக்கத்திற்காகவும் குடிநீர் வாரியத்திற்கு தமிழக அரசு மானியம் வழங்குகிறது. 2014–15 ஆம் ஆண்டு ரூ.227.80 கோடி நிதியினை வாரியம் மானியமாக பெற்றுள்ளது.

## 2. குடிநீர் வழங்கல் – புதிய திட்டங்கள்

சென்னைக் குடிநீர் வாரியம், குடிநீர் வசதி இல்லாத இடங்களுக்கு, குறிப்பாக சென்னை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட 42 பகுதிகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி குடிநீர் வழங்கிட பல்வேறு திட்டங்களை எடுத்துக்கொண்டுள்ளது.

**இணைக்கப்பட்ட 42 பகுதிகளின் குடிநீர் வழங்கல் திட்டங்களின் நிலவரம்**

| இணைக்கப்பட்ட பகுதிகளின் எண்ணிக்கை | குடிநீர் விநியோகப் பணிகள் முடிக்கப்பட்டவை | பணிகள் நடைபெற்று வருபவை | பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியவை |
|---|---|---|---|
| 42 | 9 | 28 | 6 |

கத்திவாக்கம், வளசரவாக்கம், போரூர், திருவொற்றியூர், அம்பத்தூர், மதுரவாயல், ஆலந்தூர் மற்றும் மீனம்பாக்கம் ஆகிய இணைந்த 8 பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் முடிவடைந்துள்ளது.

நெற்குன்றம், உள்ளகரம்–புழுதிவாக்கம், மாதவரம், ராமாபுரம், நொளம்பூர், காரம்பாக்கம், மணப்பாக்கம், நந்தம்பாக்கம், சோழிங்கநல்லூர், காரப்பாக்கம், ஈஞ்சம்பாக்கம், ஒக்கியம்–துரைப்பாக்கம், இடையான்சாவடி, சடையான்குப்பம், கடப்பாக்கம், நீலாங்கரை, மடிப்பாக்கம், சீஸ்தமல்லி, தீயம்பாக்கம், வடபெரும்பாக்கம், மாளவி, குரப்பட்டு, கதிர்வேடு, புத்தகரம், புழல், பள்ளிக்கரணை, கொட்டிவாக்கம், சின்னசேக்காடு, முகலிவாக்கம், பெருங்குடி மற்றும் பாலவாக்கம் ஆகிய இணைந்த 28 பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பாத்தூர், ஜல்லடம்பேட்டை, படிப்பாக்கம், நீலாங்கரை, செம்மஞ்சேரி மற்றும் உத்தண்டி ஆகிய இணைந்த 6 பகுதிகளுக்கு மத்திய அரசின் நிதியுதவி / சென்னைப் பெருநகர வளர்ச்சி திட்ட நிதியின் கீழ் குடிநீர் வழங்கும் திட்டப்பணிகள் விரைவில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

## 2.1 அறிவிக்கப்பட்ட கடல் நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையங்கள்

சென்னை கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள பேரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் 2013–ல் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் தென் சென்னை பகுதியில் கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள பட்டிபுலத்தில் அமைக்கப்படும் என்று சட்டப் பேரவையில் அறிவித்தார்கள். இதற்காக உத்தேசிக்கப்பட்ட நிலம், சட்டப் பிரச்சனைக்குட்பட்டுள்ளது எனக் கண்டறியப்பட்டதால் இந்த இடத்திற்கு அருகாமையில் கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள பேரூர் என்ற இடம் மாற்றாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் (SWRO) சுத்திகரிப்பு நிலையத்தினை, சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள பேரூரில் அமைக்கவும், சுத்திகரிக்கப்பட்ட குடிநீரினை கொண்டு செல்லும் குழாய்களை அமைத்திடவும் ரூ.4070.67 கோடியில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்விரிவான திட்ட அறிக்கை, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு குழுமத்திடம் இருந்து நிதி பெறுவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

## 2.2 சென்னை, கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள நெம்மேலியில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம்

16.04.2013 அன்று, விதி எண் 110ன் கீழ் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், சட்டப்பேரவையில், மற்றுமொரு நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையத்தினை, நெம்மேலியில் அமைந்துள்ள சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில் உள்ள 10.50 ஏக்கர் காலி இடத்தில் அமைத்திட, அறிவித்தார்கள்.

நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையத்தினை, நெம்மேலியில் ஏற்கனவே உள்ள சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில் உள்ள காலி இடத்தில் அமைக்கவும், சுத்திகரிக்கப்பட்ட குடிநீரினைக் கொண்டு செல்ல குழாய்கள் அமைத்திடவும் ரூ.1371.86 கோடியில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. தமிழக அரசு, விரிவான திட்ட அறிக்கைக்கு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இவ்விரிவான திட்ட அறிக்கை, மத்திய அரசின் நிதி மற்றும் ஜெர்மன் வங்கியின் நிதி பெறுவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு விரைவில் ஒப்பந்தம் கோரப்படவுள்ளது.

## 2.3 தாம்பரம், பல்லாவரம் மற்றும் பம்மல் பகுதிகளுக்கு குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குழாய் பதித்தல்

பூந்தமல்லி புறவழிச்சாலை சந்திப்பில் இருந்து தாம்பரம் வரை 22 கி.மீ. நீளத்திற்கு 1,200 மில்லி மீட்டர் விட்டமுள்ள குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குழாய் பதித்து, தாம்பரம், பல்லாவரம், பம்மல் மற்றுமுள்ள உள்ளாட்சி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகத்தினை விரிவாக்கம் செய்யும் திட்டத்திற்கு உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதியில் இருந்து ரூ.93.48 கோடியில் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது மற்றும் பணிகள் முடிவுற்றுள்ளன.

## 2.4 செம்பரம்பாக்கத்திலிருந்து, பூந்தமல்லி புறவழிச் சாலை சந்திப்பு வரை குடிநீர் கொணரும் இரண்டாவது பிரதான குழாய் பதித்தல்

செம்பரம்பாக்கம் சுத்திகரிப்பு நிலையத்தின் முழு சுத்திகரிப்பு நீரின் அளவான நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை சென்னைக்கு கொண்டுவர ஏதுவாக செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து 2000 மில்லி மீட்டர் விட்டமுள்ள இரண்டாவது குடிநீர் குழாயை 6.5 கி.மீ. நீளத்திற்கு, ரூ.41.35 கோடி மதிப்பீட்டில் பூந்தமல்லி புறவழிச்சாலை சந்திப்பு வரையில் பதிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 2.5 புதியதாக அமைக்கப்படவுள்ள கண்ணன் கோட்டை மற்றும் தேர்வாய் கண்டிகை நீர்த்தேக்கத்திலிருந்து பூண்டி நீர்த்தேக்கத்திற்கு நீர் கொண்டு செல்ல குழாய் பதிக்கும் பணி

புதிதாக அமைக்கப்படவுள்ள தேர்வாய்கண்டிகை நீர்த்தேக்கத்திலிருந்து கிருஷ்ணா கால்வாய் வரை 17 கி.மீ நீளத்திற்கு 900 மி.மீ விட்டமுள்ள பிரதான விசை குடிநீர் குழாய் பதிக்க ரூ.93.77 கோடி திட்ட மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 2.6 சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் குடிநீர் திட்டப் பணிகள் (CMCDM)

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், சென்னை நகருக்கும் அத்துடன் சிறப்பு கண்ணோட்டத்துடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கும், உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்த சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தை தொடங்கினார்கள். இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரங்கள் கீழ்கண்டவாறு :-

## சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்கல் திட்டங்கள்

| வ. எண். | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பு (ரூ.கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| | **2011–12** | | |
| 1 | குடிநீர் விநியோகக் குழாய்கள் இல்லாத குடிசைப் பகுதிகளில் குடிநீர் குழாய்கள் பதித்தல் | 23.56 | பணிகள் முடிவுற்றுள்ளன |
| 2 | புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு கீழ்நிலைத் தொட்டிகள் மற்றும் குடிநீர் நிரப்பும் நிலையங்கள் அமைத்தல் | 12.23 | |
| 3 | அடைப்பு ஏற்பட்ட பிரதான குடிநீர் குழாய்கள் மற்றும் பிவிசி குழாய்களை மாற்றி அமைத்தல் | 20.71 | |
| | **2012–13 குடிநீர் வழங்கல் திட்டம்** | | |
| 4 | நொளம்பூர் | 18.00 | நொளம்பூர், காரம்பாக்கம், நந்தம்பாக்கம், ஈஞ்சம்பாக்கம் ஆகிய பகுதிகளில் பணிகள் முடிவுற்றுள்ளன. இராமாபுரம், மணப்பாக்கம், ஒக்கியம்–துரைப்பாக்கம் ஆகிய பகுதிகளில் 52 விழுக்காடு பணிகள் முடிவுற்றுள்ளன. தாமத பணியின் காரணமாக 28.11.2018 அன்று ஒப்பந்தநீக்க கடிதம் அளிக்கப்பட்டது. மறு ஒப்பந்தம் கோருவதற்கு மறு மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 5 | காரம்பாக்கம் | 20.56 | |
| 6 | இராமாபுரம் | 32.54 | |
| 7 | மணப்பாக்கம் | 10.92 | |
| 8 | நந்தம்பாக்கம் | 6.00 | |
| 9 | ஒக்கியம்–துரைப்பாக்கம் | 46.00 | |
| 10 | ஈஞ்சம்பாக்கம் | 22.30 | |
| 11 | சோழிங்கநல்லூர்–காரப்பாக்கம் | 35.70 | |
| | **2013–14 குடிநீர் வழங்கல் திட்டம்** | | |
| 12 | சடையான்குப்பம் | 28.21 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 13 | இடையான்சாவடி | | |
| 14 | கடப்பாக்கம் | | |
| 15 | மணலி | 21.33 | |
| 16 | பள்ளிக்கரணை | 42.82 | |
| 17 | முகலிவாக்கம் | 31.37 | |
| 18 | சின்னசேக்காடு | 11.00 | |
| 19 | கொட்டிவாக்கம் | 23.00 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 20 | பெருங்குடி | 45.00 | |
| 21 | பாலவாக்கம் | 30.00 | |
| 22 | வடபெரும்பாக்கம் மற்றும் தியம்பாக்கம் | 20.00 | பணிகள் நடைபெற்று வருகின்றன |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 23 | சூரப்பட்டு | 82.61 | 97 சதவீத பணிகள் முடிவுற்றுள்ளன. தாமத பணியின் காரணமாக 28.11.2018 அன்று ஒப்பந்த நீக்க கடிதம் அளிக்கப்பட்டது. மறு ஒப்பந்தம் கோருவதற்கு மறு மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன |
| 24 | கதிர்வேடு | | |
| 25 | புத்தகரம் | | |
| 26 | புழல் | | |
| | மொத்தம் | 583.86 | |

## 2.7 ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டம் (JnNURM)

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் மத்திய அரசு 35 சதவீதம் மானியம் வழங்குகிறது, மாநில அரசு 15 சதவீதத்தை வட்டியில்லா கடனாக வழங்குகிறது. இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரங்கள் பின்வருமாறு:–

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | சென்னை மாநகரின் குடிநீர் விநியோக அமைப்பின் மேம்பாட்டுப் பணிகள் | 322.00 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| | குடிநீர் வழங்கல் திட்டம் | | |
| 2 | மதுரவாயல் | 23.30 | |
| 3 | திருவொற்றியூர் | 85.11 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| 4 | அம்பத்தூர் | 267.08 | |
| 5 | ஆலந்தூர் குடிநீர் வழங்கல் மேம்பாட்டுப் பணிகள் | 64.39 | |
| 6 | உள்ளகரம்–புழுதிவாக்கம் | 24.24 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 7 | நெற்குன்றம் (எஞ்சிய பணிகள்) | 17.28 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| | மொத்தம் | 803.40 | |
| | இதர உள்ளாட்சி அமைப்புகளுக்கான வைப்பு நிதிப் பணிகள் | | |
| 1 | ஆவடி | 103.84 | பெரும்பாலான பணிகள் முடிவுற்றன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 2 | ஸ்ரீ பெரும்புதூர் | 42.20 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| | மொத்தம் | 146.04 | |

## 2.8 ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) திட்டம்

மாதவரம் பகுதிக்கான குடிநீர் வழங்கல் திட்டம் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் நிதி உதவியுடன் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. பணியின் விவரம் பின் வருமாறு:–

| திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|
| மாதவரம் | 55.00 | 76 சதவீத பணிகள் முடிவுற்றுள்ளன. தாமத பணியின் காரணமாக 16.11.2018 அன்று ஒப்பந்த நீக்க கடிதம் அளிக்கப்பட்டது. மறு ஒப்பந்தம் கோருவதற்கு மறு மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |

## 2.9 தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்–III (TNUDP-III)

| வ. எண். | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | பம்மல் | 43.10 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 2 | பல்லாவரம் | 99.95 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| | மொத்தம் | 143.05 | |

## 3. கழிவுநீரகற்று சேவைகள்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் கழிவு நீர் சுத்திகரித்தல், சுத்திகரிக்கப்பட்ட நீரினை மீண்டும் பயன்படுத்துதல், மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து மின் உற்பத்தி செய்தல் உள்ளிட்ட கழிவு நீரகற்றல் வசதிகளை வழங்கி வருகிறது. சென்னையில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்திகரிப்பு திறன் நாளொன்றுக்கு 727 மில்லியன் லிட்டர் ஆகும்.

குடியிருப்புகளிலிருந்தும் மற்றும் பிற கட்டடங்களிலிருந்தும் வெளியேற்றப்படும் கழிவுநீர் 4500 கிலோமீட்டர் நீளம் கொண்ட கழிவுநீர் அமைப்பின் மூலம் சேகரிக்கப்படுகிறது. இவ்வாறு சேகரிக்கப்படும் கழிவுநீர் 266 கழிவுநீரேற்றும் நிலையங்களுக்கு அனுப்பப்படுகிறது. சென்னை மாநகரின் கழிவுநீர் அமைப்பு 5 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலமும் தனித்தனியான சேகரித்தல், அனுப்புதல், சுத்திகரித்தல் மற்றும் வெளியேற்றும் வசதிகளைக் கொண்டுள்ளது. கழிவுநீரேற்று நிலையங்களிலிருந்து சேகரிக்கப்படும் கழிவுநீர் 12 கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றது.

**கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் திறன்**

| வ. எண். | சுத்திகரிப்பு நிலையம் | திறன் (நாளொன்றுக்கு மில்லியன் லிட்டர்) |
|---|---|---|
| 1 | நெசப்பாக்கம் (3 பிரிவுகள்) | 117 |
| 2 | கொடுங்கையூர் (3 பிரிவுகள்) | 270 |
| 3 | கோயம்பேடு (3 பிரிவுகள்) | 214 |
| 4 | பெருங்குடி (3 பிரிவுகள் ) | 126 |
| | மொத்தம் (12 பிரிவுகள்) | 727 |

**கட்டுமானப் பணியில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்**

| வ. எண். | அமைவிடம் | சுத்திகரிப்பு திறன் (நாளொன்றுக்கு மில்லியன் லிட்டர்) | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| 1 | திருவொற்றியூர் | 31 | 26.33 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 2 | சோழிங்கநல்லூர்–1 | 18 | 33.71 | அனைத்து பணிகளும் முடிவுற்று சோதனை ஓட்டம் நிலையில் உள்ளது. |
| 3 | சோழிங்கநல்லூர் –2 | 54 | 65.97 | 51 சதவீதப் பணிகள் முடிவுற்றுள்ளன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன |
| | மொத்தம் | 103 | 126.01 | |

வாரியம் துவங்கிய 1978 ஆம் ஆண்டிலிருந்து வாரியத்தின் கழிவுநீரகற்றும் சேவைகள் பன்மடங்காக வளர்ச்சி அடைந்துள்ளது.

**கழிவுநீரகற்றும் சேவையில் முன்னேற்றங்கள்**

| வ.எண். | விவரங்கள் | 1978ஆம் ஆண்டில் | 2018ஆம் ஆண்டில் |
|---|---|---|---|
| 1 | கழிவுநீரகற்று குழாய்களின் நீளம் (கி.மீ) | 1,223 | 4500 |
| 2 | கழிவுநீரேற்று நிலையங்களின் எண்ணிக்கை | 58 | 253 |
| 3 | கழிவுநீர் சுத்திகரிப்பு திறன் (நாளொன்றுக்கு மில்லியன் லிட்டரில்) | 57 | 727 |
| 4 | நுகர்வோர்களின் எண்ணிக்கை | 1,14,000 | 8,43,623 |

2017–2018ஆம் ஆண்டில் 11,961 வீட்டு கழிவுநீர் இணைப்புகள் சென்னை மாநகரில் வழங்கப்பட்டன.

## 3.1 சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்ட நிதியின் கீழ் கழிவுநீர் அகற்றும் திட்டங்கள் (CMCDM)

இந்நிதியின்கீழ் சென்னை மாநகருடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்காக கீழ்க்காணும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**42 இணைக்கப்பட்ட பகுதிகளின் பாதாள சாக்கடை திட்டங்களின் நிலவரம்**

| இணைக்கப்பட்ட பகுதிகளின் எண்ணிக்கை | பாதாள சாக்கடை பணிகள் முடிக்கப்பட்டவை | பணிகள் நடைபெறுபவை | நடைபெற உள்ளவை | | கைவிடப்பட இருப்பவை |
|---|---|---|---|---|---|
| | | | டெண்டர் நிலை | விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருபவை | |
| 42 | 9 | 12 | 4 | 14 | 3 |

கூடுதலாக இணைக்கப்பட்ட 42 பகுதிகளில் 9 பகுதிகளான வளசரவாக்கம், ஆலந்தூர், மாதவரம், மீனம்பாக்கம், மதுரவாயல், சூரப்பட்டு, புத்தகரம், கதிர்வேடு மற்றும் நொளம்பூர் ஆகியவற்றில் பணிகள் முடிவுற்றுள்ளன.

இணைந்துள்ள 12 பகுதிகளான பெருங்குடி, போரூர், உள்ளகரம்–புழுதிவாக்கம், பள்ளிக்கரணை, அம்பத்தூர், திருவொற்றியூர், கத்திவாக்கம், ராயபுரம், சோழிங்கநல்லூர், காரப்பாக்கம், நெற்குன்றம், முகலிவாக்கம் ஆகியவற்றில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இடையான்சாவடி, சடையான்குப்பம், மற்றும் கடப்பாக்கம் ஆகிய 3 பகுதிகளுக்கான பாதாள சாக்கடை திட்டப் பணி, குறைவான மக்கள் தொகை அடர்த்தி காரணமாக கைவிடப்பட்டுள்ளது. 2021ல் போதுமான மக்கள் தொகை அடர்த்தியின் பெருக்கத்திற்கு ஏற்ப பணிகள் மேற்கொள்ளப்படும்.

மணப்பாக்கம், மணலி, சின்னசேக்காடு, காரம்பாக்கம் ஆகிய 4 பகுதிகளுக்கான பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் ஒப்பந்த நிலையில் உள்ளன.

மீதமுள்ள இணைந்துள்ள 14 பகுதிகளான நந்தம்பாக்கம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, மடிப்பாக்கம், புழல், மாத்தூர், தீயம்பாக்கம், வடபெரும்பாக்கம், செம்மஞ்சேரி, உத்தண்டி, ஒக்கியம்–துரைப்பாக்கம், ஈஞ்சம்பாக்கம், ஜல்லடம்பேட்டை ஆகியவற்றிற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கழிவு நீரகற்று பணிகள்**

| வ. எண். | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| | 2011–12 | | |
| 1 | கழிவு நீரேற்று நிலையங்களுக்கு இடையில் உந்து குழாய் பதித்தல் | 9.26 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| 2 | பிரதான கழிவுநீரேற்று உந்து குழாய்களை பெரிதாக்குதல் | 20.39 | |
| 3 | முகப்பேரில் பாதாள சாக்கடை அமைப்பின் திரும்பு வாயில்கள் அமைத்தல் மற்றும் நீர்மூழ்கி பின் இயந்திரத்துடன் கூடிய சாலை ஓர கழிவு நீரேற்று நிலையங்கள் கட்டுதல் | 14.08 | |
| 4 | தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் கழிவு நீரேற்று நிலையங்களின் மேம்பாட்டு பணிகள் | 11.24 | |
| 5 | கழிவுநீர் பிரதான குழாய்களை பெரிதாக்குதல் | 31.18 | |
| 6 | 35 ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் 50 தூர் வாரும் இயந்திரங்கள் கொள்முதல் செய்தல் | 9.90 | இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. |
| 7 | பிரதான கழிவுநீரேற்று உந்து குழாய்களை புதிய வழி தடத்தில் அமைத்தல், பெரிதாக்குதல் மற்றும் தொடர்ப் பணிகள் | 36.55 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| | 2012–13 பாதாளச் சாக்கடைத் திட்டம் | | |
| 8 | கத்திவாக்கம் | 86.15 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 9 | சோழிங்கநல்லூர்–காரப்பாக்கம் | 110.90 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 10 | இராமாபுரம் | 48.50 | 66 சதவீத பணிகள் முடிவுற்றுள்ளன. தாமத பணியின் காரணமாக ஒப்பந்த நீக்க கடிதம் அளிக்கப்பட்டது. மறு ஒப்பந்தம் கோருவதற்கு மறு மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன |
| 11 | கழிவுநீர் அமைப்பின் பராமரிப்புக்காக இயந்திரங்கள் கொள்முதல் | 15.20 | இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன |

| 2013–14 பாதாளச் சாக்கடைத் திட்டம் | | | |
|---|---|---|---|
| 12 | திருவொற்றியூர் (அன்னை சிவகாமி நகர்) | 8.51 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| 13 | நொளம்பூர் | 26.01 | |
| 14 | சூரப்பட்டு | 35.00 | |
| 15 | புத்தகரம் மற்றும் கதிர்வேடு | 60.00 | |
| 16 | முகலிவாக்கம் | 77.50 | பணிகள் தற்போது துவக்கப்பட்டுள்ளது. |
| | மொத்தம் | 600.37 | |

## 3.2 ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டம் (JnNURM)

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் மத்திய அரசு 35 சதவீதம் மானியம் வழங்குகிறது. மாநில அரசு 15 சதவீதத்தை வட்டியில்லா கடனாக வழங்குகிறது. மேற்கொள்ளப்பட்ட பணிகள் பின்வருமாறு:–

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ.கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | தகவல் தொழில் நுட்ப சாலையில் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வசதிகள் அமைக்கும் பணிகள் | 41.77 | பணிகள் முடிவுற்றுள்ளன |
| | பாதாள சாக்கடைத் திட்டம் | | |
| 2 | உள்ளகரம்–புழுதிவாக்கம் | 28.08 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 3 | அம்பத்தூர் (சிப்பம் 2,3,4 மற்றும் 5) | 130.91 | சிப்பம் 3,4,5 ஆகியவற்றில் பணிகள் முடிவுற்றன. சிப்பம் 2க்கு மறு ஒப்பந்தம் கோரப்பட்டு 6 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அவற்றில் 5 பிரிவுகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள ஒரு பிரிவிற்கு ஒப்பந்தம் கோரப்பட்டு மதிப்பாய்வில் உள்ளது. அனைத்து பணிகளும் டிசம்பர் 2019ல் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது. |
| 4 | மதுரவாயல் | 57.45 | பணிகள் முடிவுற்றுள்ளன. |
| 5 | போரூர் | 38.29 | பெரும்பாலான பணிகள் முடிவுற்றுள்ளன. இராமாபுரம் பகுதியில் பணிகள் முடிவுற்ற பின்னரே செயல்பாட்டிற்கு வரும். |
| 6 | பெருங்குடி | 20.19 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 7 | பள்ளிக்கரணை | 58.61 | 94 சதவீத பணிகள் முடிவுற்றுள்ளன. தாமத பணியின் காரணமாக ஒப்பந்த நீக்க கடிதம் அளிக்கப்பட்டது. மறு ஒப்பந்தம் கோருவதற்கு மறு மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன |
| | மொத்தம் | 375.30 | |

| இதர உள்ளாட்சி அமைப்புகளுக்கான வைப்புத் தொகை பணிகள் | | | |
|---|---|---|---|
| 8 | ஆவடி நகராட்சி | 158.05 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 9 | தாம்பரம் நகராட்சி | 160.97 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| 10 | திருமழிசை பேரூராட்சி | 20.47 | பணிகள் முடிவுற்றுள்ளன |
| 11 | ஸ்ரீ பெரும்புதூர் பேரூராட்சி | 47.40 | 79 சதவீத பணிகள் முடிவுற்றுள்ளன, தாமத பணியின் காரணமாக ஒப்பந்த நீக்க கடிதம் அளிக்கப் பட்டது. மறு ஒப்பந்தம் கோருவதற்கு மறு மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன |
| | மொத்தம் | 386.89 | |

### 3.3 தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்–III – (TNUDP-III)

இத்திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட 3 பகுதிகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ கோடியில்) | பணியின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | மாதவரம் | 50.22 | பணிகள் முடிவுற்றுள்ளன |
| 2 | திருவொற்றியூர் | 87.63 | தாமத பணியின் காரணமாக ஒப்பந்தம் நீக்கப்பட்டு, எஞ்சிய பணிகளுக்கு மறு ஒப்பந்தம் கோரப்பட்டு, மதிப்பாய்வில் உள்ளது. |
| 3 | அம்பத்தூர் பகுதி – I | 65.75 | பணிகள் முடிவுற்றுள்ளன |
| | மொத்தம் | 203.60 | |

### 3.4 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து மின்சாரம் தயாரித்தல்

சென்னைக் குடிநீர் வாரியம் கடந்த 8 ஆண்டுகளில் நாளொன்றுக்கு 378 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட 6 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை துவக்கியுள்ளது. இந்த சுத்திகரிப்பு நிலையங்களில் உயிரி வாயு (Bio Gas) மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த மின்சாரம் சுத்திகரிப்பு நிலையங்களின் மின்சாரத் தேவையை பூர்த்தி செய்ய பயன்படுத்தப்படுகிறது.

**கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து மின்சாரம் தயாரித்தல் 2014–15**

| வ. எண் | கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையம் | கழிவுநீர் சுத்திகரிக்கும் திறன் (மி.லி.) | சராசரி தயாரிக்கும் மின்சார அளவு KwH/day | தேவையான மின்சாரத்தின் அளவு KwH/ day | தேவையின்படி தயாரிக்கப்படும் அளவின் சதவிகிதம் |
|---|---|---|---|---|---|
| 1 | கொடுங்கையூர் | 110 | 14,000 | 13,500 | 103.70 |
| 2 | கோயம்பேடு | 60 | 5,000 | 9,000 | 55.55 |
| 3 | நெசப்பாக்கம்– I | 40 | 5,800 | 5,800 | 100.00 |
| 4 | நெசப்பாக்கம்– II | 54 | 3,000 | 9,000 | 33.33 |
| 5 | பெருங்குடி– I | 60 | 7,200 | 8,500 | 84.71 |
| 6 | பெருங்குடி– II | 54 | 7,000 | 8,500 | 82.35 |
| | மொத்தம் | 378 | 42,000 | 54,300 | 77.35 |

இதன் மூலம், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், மின் தேவைக்காகத் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தை சார்ந்திருக்கும் நிலையில் இருந்து 77% குறைந்துள்ளது. கடந்த 8 வருடங்களில், ரூ.39.60 கோடி மதிப்பிலான மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

2014–15ல் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தின் மதிப்பு ரூ.6.25 கோடியாகும். இனி வரும் காலங்களில் நிறுவப்பட உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் சாத்தியக் கூறுகள் உள்ள இடங்களில் இம்முயற்சியினைத் தொடர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் மின் உற்பத்திக்கு உயிரி வாயு (Bio-gas) பயன்படுத்தப்படுவதால் புவி வெப்பத்தை அதிகரிக்கும் திறன் கொண்ட மீத்தேன் மற்றும் கரியமில வாயுக்கள் சுற்றுச்சூழலில் வெளியேற்றப்படுவது தவிர்க்கப்படுவதுடன், மாநில மின் கட்டமைப்பில் இருந்து பயன்படுத்தப்படும் மின்சாரத்தின் அளவும் குறைந்துள்ளது.

## 3.5 கழிவுநீர் அகற்றும் பணிகளை இயந்திரமயமாக்குதல்

கழிவுநீர் அகற்றும் அமைப்பை சுத்தம் செய்யும் பணிகளில் இயந்திரமயமாக்கலை வாரியம் நடைமுறைபடுத்தியுள்ளது. இதற்கென தேவையான இயந்திரங்களை சென்னைக் குடிநீர் வாரியம் வாங்கியுள்ளது. தற்போது 119 ஜெட்ராடிங் இயந்திரங்கள், 241 தூர் வாரும் இயந்திரங்கள், 28 ஜெட்டிங் மற்றும் உறிஞ்சும் இயந்திரங்கள் மற்றும் 43 அதிவேக உறிஞ்சும் இயந்திரங்கள் கழிவு நீர் அமைப்பினை பராமரித்திட பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

## 3.6 கழிவுநீரகற்ற முன்னெச்சரிக்கை பராமரிப்பு பணிகள்

சென்னைக் குடிநீர் வாரியம், 7,76,466 கழிவுநீரகற்று இணைப்புள்ள நுகர்வோரின் பயன்பாட்டிற்காக 3994 கி.மீ. நீளமுள்ள கழிவுநீர் குழாய்களை பராமரித்து வருகிறது. இதில், 6,61,405 குடிநீர் நுகர்வோர்களும் உள்ளடங்கியுள்ளார்கள். சென்னை மாநகரின் புவி தளம் சமமாக உள்ளதால் கழிவுநீர் கட்டமைப்பை பராமரிப்பு செய்தல் சவாலான பணியாக உள்ளது.

சென்னைக் குடிநீர் வாரியம், கழிவுநீர் அமைப்புகளில் முன்னெச்சரிக்கை பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதை நடைமுறைபடுத்தியுள்ளது. கள நிலையை பொறுத்து கழிவுநீர் அமைப்புகளின் பராமரிப்பு காலம் வகைப்படுத்தப்படுகிறது. இதன் அடிப்படையில் உரிய இயந்திரங்களைக் கொண்டு கழிவுநீர் அமைப்பினை வாரியம் பராமரித்து வருகிறது.

மேற்கண்ட முன்னெச்சரிக்கை பராமரிப்புப்பணியினால் மாநகரில் கழிவுநீர் அடைப்புகள் குறிப்பிடத்தக்க வகையில் குறைந்துள்ளன. கழிவுநீர் அடைப்பு குறித்த புகார்கள் 36.67 சதவீதம் குறைந்துள்ளது.

## 3.7 நீர்வழிப்பாதையில் கழிவுநீர் கலப்பதைத் தடுத்தல்

சென்னை நகர நீர் வழிப் பாதைகளில் 337 இடங்களில் கழிவு நீர் கலப்பதை நிறுத்த 2012–13 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.300 கோடி ஒதுக்கப்பட்டது. இதன் மூலம் சென்னை நகர நீர்வழிப் பாதைகளில் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் கலப்பதை தடுக்க இயலும். இக்கழிவுநீர் உரிய வகையில் சுத்திகரிக்கப்பட்டு வெளியேற்றப்படும்.

முதல் கட்டமாக உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதியிலிருந்து ரூ.150 கோடி ஒப்பளிக்கப்பட்டு, மொத்தமுள்ள 337 இடங்களில், 179 இடங்களில் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் டிசம்பர் 2019 ஆண்டு முடிக்கப்படும்.

கழிவுநீர் கலக்கும் மீதமுள்ள 158 இடங்களுக்கு இரண்டாவது கட்டமாக ரூ.163 கோடிக்கு ஒதுக்கீடு செய்து அரசு ஆணை எண் 158, நாள் 11.12.2014 வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 3.8 சுத்திகரிக்கப்படாத மற்றும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை தொழிற்சாலைகளுக்கு மறு பயன்பாட்டுக்கு அளித்தல்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் நாளொன்றுக்கு 36 மில்லியன் லிட்டர் இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை திருவாளர்கள் சென்னை பெட்ரோலியம் கார்ப்பொரேஷன் லிமிடெட், சென்னை உரத்தொழிற்சாலை லிமிடெட் மற்றும் மணலியில் உள்ள மணலி பெட்ரோ இரசாயன பொருட்கள் தொழிற்சாலைக்கும் வழங்கி வருகிறது. இதன்மூலம் வாரியத்திற்கு 2014–15ஆம் ஆண்டில் ரூ.13.50 கோடி வருமானம் கிடைத்தது.

### 3.9. புதிய திட்டங்கள்

#### 3.9.1 கழிவுநீரை மறுசுழற்சி முறையில் சுத்தம் செய்து மீண்டும் உபயோகப்படுத்துதல்

கோயம்பேட்டில் 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன்கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம்

இருங்காட்டுக் கோட்டை, ஸ்ரீபெரும்புதூர் மற்றும் ஒரகடம் ஆகிய பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகளுக்கு, சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை வழங்க ரூ.394 கோடி மதிப்பீட்டில் கோயம்பேட்டில் நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் (Tertiary Treatment Reverse Osmosis) அமைக்க தமிழக அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. தற்போது பணிகள் நடைப் பெற்று வருகின்றன.

#### 3.9.2 கொடுங்கையூரில் 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சட்டப் பேரவையில், சுத்திகரிக்கப்பட்ட நீரை பயன்படுத்துவதற்குப் பதிலாக இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையில், மூன்றாம் நிலை சுத்திகரிப்பு செய்து வடசென்னை பகுதியில் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் மின்சார வாரிய மின் உற்பத்தி நிலையங்களுக்கு வழங்குவதற்கு அறிவித்தார். கொடுங்கையூரில் நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையிலான மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் ரூ.255 கோடி மதிப்பீட்டில் TNSUDP நிதியின் கீழ் அமைக்கப்படும். தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் நடைப் பெற்று வருகின்றன.

## 4. மழைநீர் சேகரிப்புத் திட்டம்

மாண்புமிகு முதல்வர் அவர்களின் தொலை நோக்கு சிந்தனையுடன் மேற்கொண்ட முயற்சிகளின் காரணமாக மழைநீர் சேகரிப்பினை சென்னைக் குடிநீர் வாரியம் 2002 முதல் நடைமுறைப்படுத்தி வருகிறது. இதன் மூலம் சென்னை நகரம் மழைநீர் சேகரிப்பில் முன்னோடியாக திகழ்கிறது. சென்னைக் குடிநீர் வாரியம் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை சென்னை வாழ் மக்களிடையே பிரபலமடையச் செய்ய பல்வேறு நடவடிக்கைகளை கீழ்கண்டவாறு மேற்கொண்டுள்ளது.

குடிநீர் மற்றும் கழிவுநீர் புது இணைப்பை பெறுவதற்கும், பழைய இணைப்பைப் புதுப்பிப்பதற்கும், மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்துவது அனைத்து கட்டடங்களுக்கும் கட்டிடங்களின் அளவு மற்றும் பரப்பு வித்தியாசம் இல்லாமல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சென்னையில் தற்போது சுமார் 7,20,000 கட்டிடங்களில், மொத்தம் 8,27,800 மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் உள்ளன. 2014–15ஆம் ஆண்டு 8615 மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்கப்பட்டன. மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் மூலம் நீர் செறிவூட்டு திறன் 2.30 ஆயிரம் மில்லியன் கனஅடி (TMC) ஆக உள்ளது. முறையாகவும், தொடர்ச்சியாகவும் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை பராமரிக்க நுகர்வோர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் சிறப்பு முகாம்கள் வருடந்தோறும் நடத்தப்படுகிறது. சென்னை நகரில் உள்ள மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை பகுதிப் பொறியாளர்களும், பணிமனை பொறியாளர்களும் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள்.

மழைநீர் சேகரிக்கும் திட்டத்தை செயல்படுத்தியதால், குறிப்பாக மழைக்காலத்தில் நிலத்தடி நீரின் மட்டமும் தரமும் ஆண்டு தோறும் மேம்பட்டு வருகிறது.

## 5. ஏரிகளை பராமரித்தல்

மழைநீரை சேமித்தல் மற்றும் நிலத்தடிநீர் மட்டத்தை உயர்த்தவும், நீரை மறுசெறிவு செய்யவும் ஏரிகளை பராமரிப்பது முக்கியமானதாகும். சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், 641.58 ஹெக்டேர் பரப்பளவு மற்றும் 1.05 ஆயிரம் மில்லியன் கன அடி (TMC) நீர் தேக்க கொள்ளளவு திறன் கொண்ட சென்னை மாநகரில் உள்ள 21 ஏரிகளை ஒழுங்குபடுத்தி பராமரித்து அவற்றின் நிலத்தடிநீர் மறுசெறிவாற்றலை முழு அளவில் பயன்படுத்த பரிசீலித்து வருகிறது.

## 6. குறைகளை களைதல்

வாரியத்தின் சேவைகளை மேம்படுத்தவும், வெளிப்படைத் தன்மையை அதிகரிக்கவும் மற்றும் நுகர்வோர்களின் குறைகளை விரைந்து களையவும், வாரியம் கீழ்காணும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

### 6.1 24X7 புகார்களை பதிவு செய்தல் மற்றும் கண்காணிக்கும் அமைப்பு

சென்னைக் குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் குறைகள் களையும் பிரிவு 24 மணி நேரமும் வாரத்தின் எல்லா நாட்களும் புகார்களை பெறவும், பதிவு செய்யவும், கண்காணிக்கவும்

செயல்பட்டு வருகிறது. இம்மையத்தில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி எண் 45674567 மூலமாகவோ, நுகர்வோர் தங்களது புகார்களையும்/குறைகளையும் பதிவு செய்யலாம். பதிவு செய்யப்பட்ட புகார்கள்/குறைகள் அந்தந்த பணிமனைப் பொறியாளர்களுக்கு தாமதமின்றி இணையதளம் மூலமும், குறுந்தகவல் சேவை மூலமும் அனுப்பப்பட்டு உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. புகார் பிரிவில் சராசரியாக ஒரு நாளைக்கு 85 புகார்கள் பதிவு செய்யப்படுகின்றன.

நுகர்வோர் தங்களது புகார்களை அலைபேசி தொடர்பு மூலமாக பதிவு செய்தவுடன், புகார் பெறப்பட்டதற்கான ஒப்புகையை வாரியத்திடமிருந்து குறுந்தகவல் சேவை மூலமாக பெற சென்னைக் குடிநீர் வாரியம் குறுந்தகவல் சேவை முறையை (SMS) செயல்படுத்தியுள்ளது. புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்ட பிறகு, நடவடிக்கை விவரங்கள் குறித்து நுகர்வோருக்கு மீண்டும் குறுந்தகவல் சேவை மூலமாக தகவல் தரப்படுகிறது.

### 6.2 இணையதளம் மூலம் புகார்களை நிவர்த்தித்தல்

சென்னைக் குடிநீர் வாரியம் www.chennaimetrowater.tn.nic.in இணைய தளத்தை கொண்டுள்ளது. நுகர்வோர் தங்களின் புகார்களை வாரியத்தின் இணையதளத்தில் பதிவு செய்ய முடியும். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட புகார்கள் நிவர்த்திக்க சம்பந்தப்பட்ட பகுதி அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு மக்கள் சாசனத்தின்படி நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

### 6.3 நுகர்வோர் குறைதீர்க்கும் கூட்டம்

வாரியம், சேவை வழங்குதலை மேம்படுத்துவதற்காக, நுகர்வோர் குறைதீர்ப்பு கூட்டங்களை (Open House Meeting) வாரியத்தின் அனைத்து பகுதி அலுவலகங்களிலும், ஒவ்வொரு மாதமும், இரண்டாம் சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை நடத்தப்பட்டு வாரியத்தின் மூத்த அதிகாரிகள் இந்த கூட்டங்களில் தலைமை தாங்குகின்றனர். இக்கூட்டங்களில் பெறப்படும் புகார்கள் / குறைகள் / ஆலோசனைகள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

ஹர்மந்தர் சிங்,
அரசு முதன்மைச் செயலாளர்.

## ஐந்தாண்டு நிதிநிலைச்சுருக்கம் – ஒரு கண்ணோட்டம்

(ரூபாய் கோடியில்)

| விவரங்கள் | 2015-16 | 2014-15 | 2013-14 | 2012-13 | 2011-12 |
|---|---|---|---|---|---|
| அ. வருமானம் | | | | | |
| குடிநீர் விற்பனை மற்றும் குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி | 448.56 | 440.37 | 372.4 | 367.11 | 341.38 |
| இதர வருவாய் | 452.70 | 290.47 | 343.4 | 240.47 | 188.78 |
| மொத்த வருவாய் | 901.26 | 730.84 | 715.80 | 607.58 | 530.16 |
| ஆ. செலவினம் | | | | | |
| சம்பளம் மற்றும் ஊதியம் | 196.72 | 192.36 | 157.27 | 153.71 | 158.66 |
| இயக்குதல் மற்றும் பராமரித்தல் | 558.79 | 465.43 | 439.47 | 327.3 | 263.27 |
| வட்டி | 81.92 | 91.39 | 90.57 | 96.05 | 93.99 |
| தேய்மானம் | 166.86 | 165.59 | 146.38 | 138.43 | 130.15 |
| இதர செலவினம் | 47.41 | 93.28 | 64.84 | 59.17 | 65.81 |
| மொத்த வருவாய் செலவினங்கள் | 1051.70 | 1008.05 | 898.53 | 774.66 | 711.88 |
| வரவை விட செலவு அதிகம் (அ-ஆ) (பற்றாக்குறை) | -150.44 | -277.21 | -182.73 | -167.08 | -181.72 |
| பங்குகள் | 1627.25 | 1570.10 | 1483.68 | 1423.72 | 1231.77 |
| அரசு மானியம் | 3566.50 | 3145.59 | 2507.97 | 1939.42 | 1485.63 |
| நீண்ட கால கடன்கள் | 1177.33 | 1219.83 | 1267.69 | 1310.30 | 1370.32 |
| நிலையான சொத்துக்கள் | 6240.63 | 5903.27 | 5452.42 | 4857.10 | 4480.87 |
| தற்போதைய நிகர சொத்துக்கள் | -1038.80 | -986.56 | -934.69 | -742.52 | -784.95 |
| சேர்ந்த மிகை வரவு/பற்றாக்குறை | -1169.25 | -1018.81 | -741.60 | -558.87 | -391.76 |
| மொத்த பணியாளர்கள் | 3,094 | 3,234 | 3,483 | 3,578 | 3,929 |

**சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் 2015–16 ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகள் சட்டமன்றப் பேரவை முன் வைப்பதில் ஏற்பட்ட காலதாமதத்திற்கு உரிய காரணங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | (அ) | தமிழ்நாடு அரசு நிதித் துறையின் அறிவுரைப்படி நிறுவனங்கள், கணக்குகளை எந்த கால கட்டத்திற்குள் தொகுக்க வேண்டும் | 30.06.2016 |
| | (ஆ) | கணக்குகள் தொகுக்கப்பட்ட தேதி | 17.05.2018 |
| | (இ) | உரிய கால கட்டத்திற்குள் தொகுக்கப்படாவிட்டால் அதற்கான காரணங்கள் | 42 உள்ளாட்சி அமைப்புக்களின் கணக்குகளை ஒருங்கிணைத்து திருத்தி அமைக்கப்பட்ட நகர அமைப்பால், கணக்குகளை முடிப்பதில் பெருமளவு தாமதம் ஏற்பட்டது. 2014–15 ஆம் ஆண்டில், புதிதாக சேர்க்கப்பட்ட பகுதி அலுவலகங்களில் யூனிக்ஸ் மென்பொருளிலிருந்து ஆரக்கிள் மென்பொருளுக்கு மாற்றப்பட்டதின் காரணமாக கணக்குகளை முடிப்பதில் தாமதம் ஏற்பட்டது. அதன் காரணமாக 2015–16ம் ஆண்டின் கணக்குகளை முடிப்பதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது. |
| 2. | (அ) | கணக்குகளை தணிக்கை செய்ய தணிக்கையாளர்கள் எப்பொழுது நியமனம் செய்யப்பட வேண்டும் | இந்திய தணிக்கை துறைத் தலைவர் தணிக்கையாளர்களை சிபாரிசு செய்ததும், அதை அரசு அனுமதி கொடுத்தவுடன். |
| | (ஆ) | நியமனம் செய்யப்பட்ட தேதி | 22.09.2017 |
| | (இ) | உரிய காலத்திற்குள் தணிக்கையாளர் நியமனம் செய்யப்படாததற்கான காரணங்கள் | ஏழு மாதங்களாக வாரியக் கூட்டம் நடைபெறவில்லை |
| 3. | (அ) | தணிக்கையாளர்கள் எந்த தேதியில் தணிக்கையை முடிக்க வேண்டும் | 31.10.2016 |
| | (ஆ) | தணிக்கை முடிந்த தேதி | 17.05.2018 |
| | (இ) | உரிய காலத்திற்குள் தணிக்கை முடிக்கப்படாததற்கான காரணங்கள் | உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் வாரியக்கணக்குடன் இணைக்கப்பட்டது. மேற்கண்ட காரணங்களால் தணிக்கையாளருக்கு குறித்த காலம் 2011–12 முதல் 2013–14 வரை கணக்குகள் சமர்ப்பிக்கப்படவில்லை. 2014–15 ஆம் ஆண்டில், புதிதாக சேர்க்கப்பட்ட பகுதி அலுவலகங்களில் யூனிக்ஸ் மென்பொருளிலிருந்து ஆரக்கிள் மென்பொருளுக்கு மாற்றப்பட்டதின் காரணமாக கணக்குகளை முடிப்பதில் பெருமளவு தாமதம் ஏற்பட்டது. அதனை தொடர்ந்து 2014–15ம் |

| | | | |
|---|---|---|---|
| | | | ஆண்டும் கணக்குகள் முடிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக 2015–16ம் ஆண்டின் கணக்குகளை முடிப்பதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது. |
| 4. | (அ) | மாநில கணக்காயர்/தணிக்கையாளர் கருத்துகள் பெறப்பட வேண்டிய தேதி | பொருந்தாது |
| | (ஆ) | பெறப்பட்ட தேதி | பொருந்தாது |
| | (இ) | உரிய காலத்திற்குள்முடிக்காவிட்டால் அதற்கான காரணங்கள் | பொருந்தாது |
| 5. | (அ) | ஆண்டு கணக்குகள் எந்த தேதிக்குள் வாரியத்தின் பொதுக் குழுக் கூட்டத்தில் வைக்கப்பட வேண்டும் | 30.11.2016 |
| | (ஆ) | எந்த தேதியில் வைக்கப்பட்டன | 05.07.2018 |
| | (இ) | கால தாமதத்திற்கான காரணங்கள் என்ன | உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் வாரியக்கணக்குடன் இணைக்கப்பட்டது. மேற்கண்ட காரணங்களால் தணிக்கையாளருக்கு குறித்த காலம் 2011–12 முதல் 2013–14 வரை கணக்குகள் சமர்ப்பிக்கப்படவில்லை. 2014–15 ஆம் ஆண்டில், புதிதாக சேர்க்கப்பட்ட பகுதி அலுவலங்களில் யூனிக்ஸ் மென்பொருளிலிருந்து ஆரக்கிள் மென்பொருளுக்கு மாற்றப்பட்டதின் காரணமாக கணக்குகளை முடிப்பதில் பெருமளவு தாமதம் ஏற்பட்டது. அதனை தொடர்ந்து 2014–15ம் ஆண்டும் கணக்குகள் முடிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக 2015–16ம் ஆண்டின் கணக்குகளை முடிப்பதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது. |
| 6. | (அ) | அச்சடிக்கப்பட்ட ஆண்டு அறிக்கைகள் பெறப்பட வேண்டிய தேதி | 31.12.2016 |
| | (ஆ) | உரிய காலத்தில் பெறப்படாவிட்டால் அதற்குரிய காரணங்கள் | உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் வாரியக்கணக்குடன் இணைக்கப்பட்டது. மேற்கண்ட காரணங்களால் தணிக்கையாளருக்கு குறித்த காலம் 2011–12 முதல் 2013–14 வரை கணக்குகள் சமர்ப்பிக்கப்படவில்லை. 2014–15 ஆம் ஆண்டில், புதிதாக சேர்க்கப்பட்ட பகுதி அலுவலங்களில் யூனிக்ஸ் மென்பொருளிலிருந்து ஆரக்கிள் |

| | | | |
|---|---|---|---|
| | | | மென்பொருளுக்கு மாற்றப்பட்டதின் காரணமாக கணக்குகளை முடிப்பதில் பெருமளவு தாமதம் ஏற்பட்டது. அதனை தொடர்ந்து 2014–15ம் ஆண்டும் கணக்குகள் முடிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக 2015–16ம் ஆண்டின் கணக்குகளை முடிப்பதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது. |
| 7. | (அ) | ஆண்டு கணக்குகள் அரசுக்கு அனுப்பப்பட வேண்டிய தேதி | 31.12.2016 |
| | (ஆ) | ஆண்டு கணக்குகள் அரசுக்கு அனுப்பப்பட்ட தேதி | 25.10.2018 |
| | (இ) | உரிய காலத்தில் பெறப்படாவிட்டால் அதற்குரிய காரணங்கள் | --- |
| 8. | (அ) | ஆண்டு அறிக்கையை அரசு பெற்ற தேதி | --- |
| | (ஆ) | ஆய்வு செய்ய எடுத்துக் கொண்ட காலம் | --- |
| | (இ) | காலதாமதமிருப்பின் அதற்குரிய காரணங்கள் | --- |
| 9. | (அ) | ஆண்டு அறிக்கை பேரவை முன் வைக்கப்பட வேண்டிய தேதி | 31.03.2017 முன்னால் |
| | (ஆ) | பேரவைச் செயலகத்திலிருந்து அனுப்பப்பட வேண்டிய தேதி | அடுத்த கூட்டத் தொடருக்கு முன்னால் |

**ஹர்மந்தர் சிங்,**
அரசு முதன்மைச் செயலாளர்.